இதழ் 322
18 ஜனவரி 2025
17 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube.com/@IlakkuWeb2.0
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1

## எல்லைதாண்டும் மீனவர் பிரச்சினையை இலங்கை எவ்வாறு கையாளப் போகிறது?



அகிலன்

## திருகோணமலையில் சோலார் திட்டத்தால்



## பறி போகும் வயல் நிலங்கள்..!

பா.அரியநேத்திரன்



## மக்களால் நிராகரிக்கப் பட்டவர்களை அழைப்பதில் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும்

இராசன் காந்தி
சமுக செயல்பாட்டாளர், தமிழ் நாடு.


© 2025 இலக்கு இணையம்

## இது சிங்கள, பௌத்த நாடு! கஜேந்திரகுமார் போன்றவர்கள் இங்கு துள்ளக்கூடாது

### எச்சரிக்கிறார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா



“இலங்கை என்பது சிங்கள, பௌத்த நாடாகும். எனவே, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் இங்கு துள்ளக்கூடாது” என்று முன்னாள் அமைச்சர்மேர்வின்சில்வாஎச்சரித்துள்ளார்.

“இலங்கை என்பது சிங்கள தேசமாகும். வடக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என ஒருவர் இருக்கின்றார். அவர் பௌத்த சாசனத்துக்கு எதிராகக் கூக்குரல் எழுப்புகின்றார்” என்று தெரிவித்த மேர்வின் சில்வா, “எமது நாட்டில் அவ்வாறு செய்ய முடியாது” என்றும், “பண்டுகாபய மன்னர் முதல் சிங்கள மன்னர்களே இலங்கையை ஆண்டுள்ளனர்” என்றும் அவர் தெரிவித்தார்.

“எனவே, இது சிங்கள, பௌத்த தேசமாகும்” என்றும், “எனினும், பௌத்த தர்மத்துக்கமைய நாம் அனைத்து சமயங்களையும், இனங்களையும் மதிக்கின்றோம்” என்றும் தெரிவித்த மேர்வின் சில்வா, “ஆதலால், இங்குள்ளவர்கள் எம்முடன் கைகோர்த்துப் பயணிக்க

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## போருக்கு தயாராகுங்கள் - நேட்டோ



நேட்டோவில் அங்கம் வகிக்கும் நாடுகள் அதன் பாதுகாப்புக்கு அதிக நிதிகளை ஒதுக்கி ஒரு போர் மனநிலையில் தம்மை பேண வேண்டும் என நேட்டோ என்ற மேற்குலக நாடுகளின் பாதுகாப்புக் கூட்டணியின் தலைவர் மார்க் றூற் கடந்த புதன்கிழமை(15) பிரசல்ஸில்இடம்பெற்றபாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

ரஸ்யா, சீனா, ஈரான் மற்றும் வடகொரியாஆகிய நாடுகள்எமக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. அவர்கள் எமது ஜனநாயகத்திற்கு சவாலாக உள்ளன. போரை தடுக்க வேண்டும் என்றால் அதற்கு நாம் தயாராக வேண்டும். போரை எதிர்கொள்ளும் மனநிலைக்கு நாம் வர வேண்டும்எமது பாதுகாப்புவியூகங்களை பலப்படுத்த வேண்டும்.

எனவே நேட்டோவில் அங்கம் வகிக்கும் நாடுகள் அந்த நாடுகளின் மொத்த உற்பத்தியில் 5 விகிதத்தை நேட்டோவின் பாதுகாப்பு செலவீனங்களுக்கு வழங்க

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## ரோகிங்கிய அகதிகள் நாடு கடத்தப்படுவதை எதிர்த்து போராட்டம்



மியான்மார் ரோகிங்கிய அகதிகளை நாடு கடத்தும் தீர்மானத்தை அரசு மீள் பரீசீலனை செய்யக்கோரி மட்டக்களப்பு நகர் ஜாமிஉஸ் ஸ்லாம் ஜும்ஆ மஸ்ஜித் பள்ளிவாசல் முன்னால் பொது மக்கள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

மட்டக்களப்பு விவசாய சம்மேளனம் ரோகிங்கிய அகதிகளை நாடுகடத்தும் இந்த அரசின் தீர்மானத்தை எதிர்த்து பள்ளிவாசலுக்கு முன்னால் ஒன்று கூடுமாறு அழைப்பு விடுத்ததையடுத்து ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். நழீம், விவசாய சம்மேளன தலைவர் சுந்தரேசன் உட்பட பொதுமக்கள்ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

ரோகிங்கிய அகதிகளை துன்புறுத்தும் மியான்மாருக்கு திருப்பி அனுப்பாதே, இலங்கை அரசே சர்வதேச சட்டங்களை அமுல்படுத்து, யு.என்.எச்.சி.ஆர். அப்பாவி மியான்மார் அகதிகளை பொறுப்பெடுத்து புகலிடம் கொடுக்கும் நாடுகளுக்கு பாரப்படுத்து, மியான்மாரில் மேலும் ஒரு இலட்சம் அகதிகள் படையெடுப்பார்கள் என்ற பீதியை கிளப்பாதே, போன்ற பல வாசகங்கள் ஏந்தியவாறு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## தாய்வானுக்கு மேலதிக ஆயுதங்களை வழங்க ட்ரம்ப் அரசு திட்டம்

சீனாவின் ஆளுகையில் உள்ள சுயாட்சி மாநிலமான தாய்வானுக்கு மேலதிக ஆயுதங்களை புதிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிறம் அரசு வழங்கும் என அதன் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வற்ஸ் கடந்த



செவ்வாய்க்கிழமை(15) வொசிங்டனில் உள்ள அமைதிக்கான நிறுவனத்தின் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

தாய்வான் 20 பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு பணம் செலுத்தியுள்ளது. ஆனால் நாம் அதனை வழங்குவதில் தாமதமாக உள்ளோம். எனவே புதிய அரசின் முதன்மையான பணிகளில் இந்த ஆயுதங்களை விநியோகம் செய்வது இருக்கும்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## வனஜீவராசிகள் திணைக்களம் கையகப்படுத்திய காணிகளை விடுவிக்க கோரிக்கை

வெருகல் பிரதேச செயலகப் பிரிவின் பெரும்பாலான பகுதி வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப் படுத்தப் பட்டுள்ளதாகவும் அதனை விடுவிக்குமாறு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கோரிக்கை முன்வைக் கப்பட்டது.

வெருகல்பிரதேசசெயலாளர் பிரிவு 32041.66 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதாக காணப்படுகிறது. இதில் 25242.13 ஏக்கர் காணி 1970, 1986 ஆண்டு காலப்பகுதிகளில் வெளியிடப்பட்ட வர்த்த மானி அறிவித்தலின் மூலம் வனஜீவராசிகள் திணைக் களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 11 கிராம சேவகர் பிரிவில் 7 கிராம சேவகர் பிரிவுகள் முழுமையாகவும், 4 கிராம சேவகர் பிரிவுகள் பகுதியளவிலும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் இதில் மக்களுடைய விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.



இந்த பகுதியின் உள்ளே 3526 காணி அனுமதிப் பத்திரங்களையும், 1002 அளிப்பு பத்திரங்களையும் வழங்கியிருப்பதாகவும் அளிப்பு பத்திரங்கள் வழங்குவதற்காக நில அளவை செய்கின்றபோது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இது வனஜீவராசிகளுக்குரிய காணி என்பதை நில அளவைத் திணைக்களம் குறிப்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## மீளமுடியாத நிலையில் ஜேர்மனின் பொருளாதார வீழ்ச்சி

கடந்த இரண்டு வருடங்களாக மீளமுடியாத நிலையில் ஜேர்மனின் பொருளாதார வீழ்ச்சி காணப்படுவதாகவும், 2023 ஆம் ஆண்டு 0.3 விகிதமாக இருந்த அதன் மொத்த உற்பத்தி கடந்த வருடம் 0.2 விகிதமாக மேலும் வீழ்ச்சி கண்டிருப்பதாகவும் கடந்த புதன்கிழமை(15) வெளியிடப்பட்ட புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 வருடங்களில் இரண்டு வருடங்கள் தொடர் வீழ்ச்சி




நிலையில் இருப்பது இதுவே முதல் தடவை. ஐரோப்பாவின் மிகப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## ஹமாஸ்— இஸ்ரேல் இடையே 42 நாள் போர் நிறுத்தம் எட்டப்பட்டது

கடந்த 459 நாட்களாக காசாவில் இடம்பெற்ற போர் நிறுத்தப்படுவதாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். டோகாவில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது முதற்கட்டமாக 42 நாள் போர் நிறுத்தம்



எட்டப்பட்டுள்ளதாக கடந்த புதன்கிழமை(15) தெரிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்த்து, அமெரிக்கா மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் இந்த உடன்பாடு எட்டப்படுவதற்கான பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தன. இந்த நடவடிக்கையில் அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் டிறம்பின் பலஸ்தீனத்திற்கான சிறப்பு பிரதிநிதி ஸ்றீவ் விற்கொவ் இஸ்ரேல் மீது அதிக அழுத்தங்களை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## இலங்கையை ஆதரிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராக உள்ளது

இலங்கையை ஆதரிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராக உள்ளதென ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு தூதுக்குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோர் தெரிவித்துள்ளார்.



மேலும் இலங்கையின் ஜனநாயகத்தின் மீள் தன்மையை ஜனாதிபதித் தேர்தல் உறுதிப்படுத்தியுள்ளதுடன் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மேலும் சீர் திருத்தங்களை ஜனாதிபதியும் புதிய அரசாங்கமும் செயல்படுத்துவார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம 21 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் குறித்த தனது இறுதி அறிக்கையை ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புத் தூதுக்குழு வெளியிட்டுள்ளது.

கொழும்பு ஹில்டன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த இறுதி அறிக்கையை வெளியிட்டு வைத்து உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு தூதுக்குழுவின் தலைமை கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோர், கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

''ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிக்கையானது நாடு தழுவிய ரீதியில் 9 மாகாணங்களிலும் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பை அடிப்படையாகக் கொண்டது. இரண்டு மாத காலத்தில் இந்த அறிக்கை பூரணப்படுத்தப்பட்டது. முழு தேர்தல் செயல்முறையின் விரிவான பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டை இந்த அறிக்கை வழங்குகிறது.

இந்த அறிக்கையின் ஒரு பகுதியாக, ஜனநாயகத் தேர்தல்களுக்கான இலங்கையின் சர்வதேச உறுதிப்பாடுகளுக்கு ஏற்ப, எதிர்கால தேர்தல் செயன்முறைகளை வலுப்படுத்துவதையும் செம்மைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட 16 பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

இலங்கையின் ஜனநாயகப் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லையும் அறகலய போராட்டத்திற்கு பின்னரான அரசியல் இயல்புநிலையை மீட்டெடுத்தமையையும் 2024 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் குறித்து நிற்கின்றது.

பொதுமக்கள் ஜனநாயக செயல்முறைக்கான தங்கள் அர்ப்பணிப்பை இதன்போது வெளிப்படுத்தியுள்ளனர். அதே நேரத்தில் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு அனைத்து முக்கிய தேர்தல் கால கட்டங்களிலும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்துள்ளது.

தேர்தல் காலங்களில் தேர்தல்கள் ஆணைக் குழுவானது சுயாதீனமாகவும் உறுதியுடனும் செயல்பட்டது. தேர்தல் அமைதியாக இடம்பெற்றமையும் வேட்பாளர்கள் முடிவுகளை ஏற்றுக்கொண்டமையும் இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் சக்தியை அடிக்கோடிட்டுக் காட்டியது.

தேர்தல் பிரச்சார நிதியில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் இளைஞர்களை அதிக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

## இறைமையில் உறுதியாகச் செயற்படும் மக்களை படைபலத்தால் வெல்ல இயலாது இதுவே இஸ்ரேலிய - ஹமாஸ் யுத்தநிறுத்தம் தரும் செய்தி

பதினைந்து மாதங்கள் பலஸ்தீனிய மக்களை வெளிப்படையாக இனஅழிப்பு செய்த இஸ்ரேயல் அமெரிக்காவில் ஏற்படும் அரசியல் மாற்றத்தின் பின்னணியில் ஜனவரி 19ம் நாள் முதல் ஹமாஸ் உடன் போர்நிறுத்தம் செய்வதுடன் இவ்வாரம் தொடங்குகிறது. இதில் வென்றவர்கள் ஹமாஸ்தான். இறைமையின் மேல் உறுதியுள்ள மக்களை படைபல ஆக்கிரமிப்பால் வெல்ல இயலாது என்பது மீளவும் வரலாறாகியுள்ளது. கைதிகள் விடுவிப்பு முதல் காசாவிலிருந்து இஸ்ரேலியப் படைவிலகல் ஈறாக காசாவில் மீளவும் பலஸ்தீனிய மக்கள் குடியமர்தல் வரை பலஸ்தீனியர்களுக்கே சாதகமாக உள்ளது. ஆனால் ஆறு ஏழு வருடங்களில் இஸ்ரேயல் பலஸ்தீனியத்தைத் தேசமாக அங்கீகரிப்பதில் உறுதியாக இருப்பார்களா? பலஸ்தீனியர்கள் தங்களின் மண்ணின் மேலான இறைமையை இஸ்ரேலிய இறைமையுள் அடக்க அனுமதிப்பார்களா? இந்நேரத்தில் "அலைகள் ஓய்ந்து நீராடுவது ஆகக் கூடிய காரியமா" என்ற தமிழ் சினிமாப்பாட்டுத்தான் நினைவுக்கு வருகிறது. இந்தச் சிக்கல்களை எல்லாம் கவனத்தில் கொள்ளாது ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்கும் இருதேசத் தீர்வே வழியென்று வாயளவில் கதையளக்கும் ஈழத்து அரசியல்வாதிகள் பேசத் தொடங்கு முன்னரே ஈழத்தில் ஈழத்தமிழர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் ஆதலால் ஈழத்தமிழர் இறைமையின் அடிப்படையிலான தாயக தேசிய தன்னாட்சி மீளுறுதி பெறலே ஈழத்தமிழருக்கான ஒரே தீர்வு என்பதை ‘இலக்கு’ இவ்விடத்தில் எடுத்துரைக்க விரும்புகிறது. 24 ஆண்டுகளுக்கு முன்பு 17.01. 2001 இல் பொங்கு தமிழ் முடிவில் மரபுவழித்தாயகம், தேசியம், தன்னாட்சி என்பது பல இலட்சம் மக்களால் பிரகடனப்படுத்தப்பட்டதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

மறுநாள் ஜனவரி 20ம் நாள் உலகத்தை வரிவிதிப்புக்களாலும் தந்திரோபாய உறவாடலாலும் ஆட்சிப்படுத்த வல்லவரான அமெரிக்க ஜனாதிபதியாக மீளவும் டொனால்ட் டிரம்ப் சம்பிரதாய பூர்வமாகப் பதவியேற்கின்றார். இது உலக நாடுகள் அனைத்தையும் பொருளாதாரத்தில் தடுமாற வைக்கும் வகையில் வழங்கல் சங்கிலிகள் அனைத்தும் சிக்கல்படுமென்று அனைத்துலக நாணய நிதியமே எதிர்வு கூறியுள்ளது. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தங்களின் பிரச்சினைகளுக்கு டிரம்பின் ஆட்சியில் தமக்கான ஒருமைப்பாடுடைய ஈழத்தமிழர்களுக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி எதிர்கொள்ளாவிடில் பலத்த பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி வரம் என்பதை இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது.

மேலும் 5வீதமான மொத்த உள்நாட்டு உற்பத்தியை வெளிப்படுத்தியுள்ள சீனா தனது பொருளாதார வளர்ச்சிக்கு சிறிலங்காவுடனான தனது பங்காண்மையைக் கூட்டாண்மையாக வலுப்படுத்தக் கூடிய வகையில் சிறிலங்கா அரசத்தலைவரின் சீனாவுக்கான அணுகு முறைப் பயணம் அமைந்துள்ளது.

இதன் மகிழ்வு விருந்துக்குச் சீன அரசத்தலைவரைச் சிறிலங்காவுக்கு வரும்படியான அழைப்பையும் சிறிலங்கா அரசத்தலைவர் அநுரகுமர திசநாயக்கா உத்தியோக பூர்வமாக விடுத்துள்ளார்.

அதே வேளை பாரத் சிறிலங்கா கூட்டாண்மை ஏற்கனவே சிறிலங்காவில் உள்ளதால் அதனை மேலும் வலுப்படுத்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் சிறிலங்காவுக்கான வருகை சீன அரசத்தலைவர் உடைய வருகைக்கு முன்னர் இடம்பெறும் என்பதும் எதிர்பார்ப்பாக உள்ளது. இதற்கிடை தைவானை சீனாவின் மாகாணம் என வெளிப்படையாகவே ஏற்று சீனா சென்ற சிறிலங்காவின் ஜனாதிபதி அநுர குமர திசநாயக்கா அமெரிக்காவை அதுவும் டிரம்பின் ஆட்சியில் எப்படி எதிர்கொள்வார் என்பதைப் பொறுத்தே சிறிலங்காவின் பொருளாதாரச் சிக்கலுக்கான எதிர்காலம் உள்ளது.

இந்நேரத்தில் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்கவெனப் பல்வேறு நாடுகளிடம் மண்டியிட்டு நாட்டின் இறைமையை, அரசியலை, வளங்களைத் தாரைவார்த்து சமரசம்பேசி பல்வேறு நாடுகளுடன் (அண்மையில் இந்தியாவுடனும் தற்போது சீனாவுடனும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் உட்பட) ஒப்பந்தங்கள் செய்யும் அரசாங்கம், இந்நாட்டில் மிக நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட தேசிய இனமான தமிழர்களோடு அரசியல் ஒப்பந்தம் செய்யத் தயங்குவது ஏன்? என்ற நியாயமான கேள்வியை சமுகநீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சக்திவேல் ஊடக அறிக்கை வழியாக எழுப்பியுள்ளார். கடந்த கால அரசாங்கங்களைப் போலவே இந்த அரசாங்கமும் தமிழர்களின் அரசியலைப் பயங்கரவாதத்துள் முடக்கி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றுக் கொடுத்துச் சிங்கள பௌத்த பேரினவாதத்தை மகிழ்விக்கவே முன்நிற்கிறது என்பதும் தெளிவாகிறது. தற்போது சிறையில் உள்ள 10 அரசியல் கைதிகளில் மரணதண்டனைக் கைதிகளும் உள்ளனர். இவர்களைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு வெளியே எடுத்து விடுதலை செய்யக் கூடாதென்பதில் பேரினவாத ஆட்சியாளர்கள் உறுதியாகச் செயற்பட்டுத் தண்டனைக் காலத்தைக் கடந்தும் சிறையில் வாடும் இவர்களின் வாழ்வைச் சிறைக்குள்ளேயே கொலைசெய்வதற்கு முயற்சிப்பதாகவே தெரிகிறது. தமிழர் அரசியல் விடுதலைக்கான செயற்பாட்டினை போராளிகளும், மாவீர்களும், அரசியல் கைதிகளும் உயிர்ப்புடன் வைத்திருந்தனர். இன்றும் (சோரம் போனவர்களைத் தவிர ஏனையோர்) வைத்திருக்கின்றனர் என்பதை மறக்க முடியாது. இவர்களைத் தவிர்த்து அல்லது மறந்து விடுதலை அரசியல் செய்வது என்பது அரசியல் கொலைக்கு ஒப்பாகும். எனவே அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி வடக்குக் கிழக்கில் நடைபெறும் கையெழுத்துப்போராட்டம் மேலும் வலுப்பெற வேண்டும். இது குறுகிய அரசியல் நோக்குகளுக்கு அப்பால் ஈழத்தமிழ் மக்களின் தேசிய பேராட்டமாக மேலேழ வேண்டும் என்பது ஈழத்தமிழ் மக்களின் இன்றைய எதிர்பார்ப்பு. இதனை உணர்ந்து வடக்கு கிழக்கில் தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசத்தலைவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழுத்தம் கொடுத்து இந்த அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்தாது தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராகச் செயற்பட வேண்டாம் எனவும் அருட்தந்தை சக்திவேல் அவரது ஊடக அறிக்கையில் நெறிப்படுத்தியுள்ளார். ‘இலக்கு’ம் இதனை பாராட்டி வரவேற்கின்றது. கூடவே இந்த விடயத்திலும் 2890 நாட்களாகத் தெருவில் மழையிலும் குளிரிலும் வெய்யிலிலும் வாடி வதங்கித் தங்களின் கிட்டிய குடும்ப உறுப்பினர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதற்காக நீதி கோரிப் போராடும் தமிழ்த் தாய்மார் தந்தைமார் தங்களை அமெரிக்கா வாசிங்டனுக்கு அல்லது நியூயோர்க்கு அழைத்து தமது இந்த நிலையை உலகுக்கு தாங்கள் வெளிப்படுத்த உதவவேண்டுமென்று கடந்த வாரத்தில் விடுத்துள்ள கோரிக்கைக்கும், அனைத்து உலகிலும் வாழும் ஈழத்தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் இவ்விடயத்தில் தமிழினத்தன்மையுடன் செயற்பட்டு தங்கள் மதியாலும் நிதியாலும் தாராளமாக உதவித் தாங்கள் வாழும் நாடுகளின் மக்களதும் அரசாங்கங்களதும் ஆதரவையும் வழிகாட்டலையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் ‘இலக்கு’ வேண்டிநிற்கிறது. உலகில் உள்ள தமிழர்களின் ஊடகவியலாளர்கள் சமுக வலைத்தளங்கள் இந்த விடயத்திலாவது ஒன்றுபட்டு உடனடியாகச் செயற்பட வேண்டும் என்பதையும் ‘இலக்கு’ வலியுறுத்துகிறது. இவ்விடத்தில் ஐரோப்பிய ஒன்றிய சிறிலங்கா அரசத்தலைவர் தேர்தல் கண்காணிப்புத் தூதுக்குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோர் 17ம் திகதி வெள்ளியன்று வெளியிட்ட அறிக்கையில் நிகழ்நிலை காப்புச் சட்டம், பயங்கரவாத தடுப்புச் சட்டம் உள்ளிட்ட கட்டுப்பாட்டுச் சட்டங்களை ரத்து செய்து கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்குமாறும், நெறிப்படுத்தியுள்ளதை ஐரோப்பிய ஒன்றியத்தில் வாழும் ஈழத்தமிழர்கள் முன்னிலைப்படுத்தி அவற்றை நீக்குவிப்பதற்கான அழுத்தங்களை தாங்கள் வாழும் நாடுகளின் அரசாங்கங்கள் மூலம் செயற்படுத்த வேண்டுமெனவும் இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

**ஆசிரியர்**

# எல்லைதாண்டும் மீனவர் பிரச்சினையை இலங்கை எவ்வாறு கையாளப் போகிறது?



அகிலன்

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்கடற்தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான தமிழக படகோட்டிகளுக்கு ஒன்பது மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், ஆறு கடற்தொழிலாளர்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி எட்டு கடற்தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு , மறுநாள் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மீதான வழக்கு கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

வழக்கு விசாரணைகளை அடுத்து, படகோட்டிகள் இருவருக்கும் தலா ஒன்பது மாத சிறை தண்டனை விதித்த நீதிமன்றம், தலா 40 இலட்ச ரூபாய் தண்டமும் விதித்தது. ஏனைய ஆறு கடற்தொழிலாளிகளுக்கும் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிமன்றத்தின் இந்தத் தண்டனை, தமிழக மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பை நிச்சயமாக ஏற்படுத்தும். கடந்த சில மாதங்களாகவே இவ்வாறு எல்லை தாண்டும் மீனவர்கள் மீதான தண்டனையை இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் அதிகரித்துள்ளன.



இலங்கை சிறைகளில் தற்போது 141 இந்திய மீனவர்கள் உள்ளனர்; அவர்களில் 45 பேரின் வழக்குகள் விசாரணையில் உள்ளன, 96 பேர் தண்டனை அனுபவித்து வருகின்றனர். கடந்த 10 ஆண்டுகளில், 3,288 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர், மேலும் 558 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சமீபத்தில், பறிமுதல் செய்யப்பட்ட 13 தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கை கடற்படையினர் பயன்படுத்த இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளது. மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தில் மட்டும் தமிழக மீனவர்களின் சுமார் 200 படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் ஊடுருவல் விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் சட்டரீதியாக கடுமையாக நடந்துகொள்ளப் போகின்றது என்பதற்கான ஆதாரமாகத்தான் இவை உள்ளன. கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும், பிரதி அமைச்சர் ரத்ன கமகேயும் இது தொடர்பில் இலங்கை அரசின் அணுகுமுறை கடுமையானதாகத்தான் இருக்கும் என்பதைத் தெளிவாகவும், உறுதியாகவும் கூறிவிட்டார்கள்.

சென்னையில் இவ்வார ஆரம்பத்தில் நடைபெற்றஅயலகதமிழர்மாநாட்டில்பங்கேற்பதற்காக தமிழகம் சென்ற கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் சிவஞானம் சிறிதரன் ஆகியோர் அங்கு தெரிவித்த கருத்துக்கள் இந்தப் பிரச்சினை குறித்த தமிழகத்தின் அக்கறை எவ்வாறு உள்ளது என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

சிறீதரன் எம்.பி. இந்தப் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சருடன் பேசுவதற்கு நேர ஒதுக்கீட்டைக் கேட்டுள்ளாரே தவிர, அது தொடர்பாக தமிழகத்தில் இருந்த போது முக்கிய பேச்சுக்கள் எதிலும் ஈடுபடவில்லை. கருத்துக்களையும் வெளியிடவில்லை. “மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சருடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கேட்டுள்ளேன். வெகு விரைவில் இந்திய இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பான சந்திப்பு நடைபெறும்” என்றும் சிறீதரன் கிளிநொச்சி திரும்பிய பின்னர் தெரிவித்தார்.



தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தல் அடுத்தவருடத்தில்நடைபெறவிருக்கும்நிலையில், இவ்வாறான பேச்சுக்கு முதலமைச்சர் முன்வருவார் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. தமிழக அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு தென் தமிழகத்தின் வாக்குவங்கி பிரதானமானது. ராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற பகுதிகளில் உள்ள மீனவர்களின் வாக்குகள் தீர்மானம் மிக்கவை.

இந்தியப் பொதுத் தேர்தல் காலத்தில் இந்த வாக்குகளை இலக்கு வைத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூட, ராமேஸ்வரத்தில் முக்கியமான உரைகளை நிகழ்த்தியிருந்தமை கவனிக்கத்தக்கது. அதனால், சிறீதரனின் கோரிக்கையை ஏற்று பேச்சுவார்த்தை ஒன்றுக்கு தமிழக முதலமைச்சர் முன்வருவார் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல.




சென்னை மாநாட்டுக்கு தமிழகப் பிரதிநிதிகள் பயணமாகும் போதே இது தொடர்பில் வடபகுதியில் உள்ள மீனவர் அமைப்புக்களால் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தது. தமிழக மீனவர்களின் ஊடுருவல்களால் வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழக முதலமைச்சருடனும், தி.மு.க. உட்பட முக்கிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் இலங்கையிலிருந்து செல்லும் பிரதிநிதிகள் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பகிரங்கமாகவே கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மீனவர் பிரச்சினை ஒரு உணர்வுபூர்வமான விவகாரம். அதுவும் தேர்தல் சட்டமன்றத் தேர்தல் எதிர்கொள்ளப்படும் நிலையில், அரசியல் கட்சிகள் அனைத்துமே இதனை தமது அரசியலுக்குத்தான் பயன்படுத்திக்கொள்ள முற்படுவார்கள். வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தமிழகத்தின் “தமிழ்த் தேசிய“ அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்குத் தெரியாதவையல்ல. ஆனால், அவர்கள் அதனைப் பேசமாட்டார்கள்.

மீன்பிடிப் படகுகளில் எல்லை தாண்டி வந்து பிடிபடுபவர்கள் அப்பாவி மீனவர்களாக இருக்கலாம். ஆனால், அவர்களை இயக்குபவர்கள் தமிழகத்தின் அரசியல் செல்வாக்கு மிக்க பெரும் முதலாளிகள். அவர்களிடம்தான் பெறுமதிவாய்ந்த ட்ரோலர் படகுகள் பெருமளவுக்கு உள்ளன. மீன்வளத்தையும், கடல் வளங்களையும் பாதுகாக்க வேண்டும் என்பதையும்விட உடனடியாக

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# முள்ளிவாய்க்கால் படுகொலையின் கொடிய வேர்களை இலங்கையின் நீண்டகால அரசியல், சமூக, பொருளாதார கட்டமைப்புகளில் காண முடிவது எப்படி?




## பகுதி 1

தூய இலட்சியங்களினாலும், தர்ம போதனைகளினாலும், ஒசோனை உடைக்கவல்ல ஒப்பாரிகளினாலும், வரலாற்றை நிர்ணயிக்க முடியாது. சிங்கத்தின் பிடியில் யானையின் அலறல் காட்டைப் பிளந்து ஓசோனை உடைக்கும். ஆனாலும் கூட, யானையைக் கூறு போட்டுச் சிங்கங்கள் உண்ணத் தவறுவதில்லை.

"எதனையும் அரசியலாகப் பார்க்க வேண்டும்;
அனைத்தும் அரசியலுக்குக் கீழ்ப்பட்டவையே"

அரசியல் என்பது நலன்களைக் கையாள்வது பற்றிய இயங்கியல் ஆகும். உறவுகள் நலன்களால் ஆனவை. நலன்கள் கொடுக்கல், வாங்கல் அல்லது ஆக்கிரமிப்பாலானவை. தாய்க்கும் - பிள்ளைக்கும், காதலனுக்கும் - காதலிக்கும், அயலவனுக்கும் - அயலவனுக்கும், அண்டை நாட்டுக்கும் - அயல் நாட்டுக்கும், உள்நாட்டுக்கும் - வெளிநாட்டுக்கும் இப்படி எதனை எடுத்துக்கொண்டாலும் அனைத்து உறவுகளும் நலன்களால் கட்டியெழுப் பப்படுபவை. தேவையே தர்மம் நலன்களே அரசியல் அரசியல் இன்றி அணுவும் அசையாது.




தேவையில் இருந்து நலனும், நலனில் இருந்து தேவையும், தேவையிலும் நலனிலும் இருந்து அதிகாரமும், அதிகாரமே அரசியலாகவும் வடிவம் பெறுகின்றன. அதிகாரத்தின் உச்சம் இறைமையாகவும் இறைமைக்கான நிறுவன பீடம் அரசாகவும் கட்டமைப்பாகின்றன. இந்த அரசைக் கோலோச்சுவது சார்ந்த நடப்பியலே அரசியலெனப்படுகிறது. இந்தவகையில், பூமியில் அனைத்துமே அரசியலுக்குக் கீழ்ப்பட்டவையே.

அதாவது, அரசு அதிகாரத்தைக் கையில் எடுப்பது பற்றிய வித்தைதான் அரசியலாகும். இந்த அரசியல் அதிகாரம் நீதி - தர்மம் - நியாயங்களால் நிர்ணயிக்கப்படுவதில்லை. அது தேவைக்கு ஏற்ப சூழல் சார்ந்த பலத்தினால் நிர்ணயிக்கபடுகிறது. அதாவது, உள்ளடக்கத்தில் தேவையிலிருந்து சூழல் சார்ந்த பலத்தைக் கையாளும் வித்தையே அரசியலாகும்.

இதன்படி அனைத்துவகையான புனிதப் பிரகடனங்களுக்கும் அப்பால், 'வரலாறானது வெற்றி பெற்றவர்களால் எழுதப்படுகிறது' (*'History is written by victors'*) என்பதே நடைமுறை உண்மையாகும்.



மு.திருநாவுக்கரசு

பூமியில் இருந்து கல்லை மேல் நோக்கி எறிந்தால், அது கீழ் நோக்கி விழுகிறது. இப்படி கல் கீழ் நோக்கி விழுவதற்குப் பெயர்தர்மம் அல்ல அது இயற்கை விதி. ஆதலால், இந்தப் பிரபஞ்சத்தில் அனைத்துமே குறிப்பிட்ட விதிகளின் வழியே பயணிப்பவை என்பதால் தேவையிலிருந்து நலனைத் தெரிவு செய்து, தேவை + நலன் என்ற கூட்டு இணைப்பை விதிக்கு உட்படுத்தி, விதி வழியே இலக்கை அடையுமாறு வரலாறு கட்டளையிடுகிறது.

மொத்தத்தில், அனைத்துமே அரசியல். அரசியலின் உள்ளடக்கம் தேவைகளும் அதன் வழி நலன்களுமே. தேவைகளும் நலன்களும் ஏதோ ஒரு விதிக்கு உட்பட்டவை.

அவ்விதியை அடையாளம் காண்பதற்கான கருவி அறிவியல். இதனால் அரசறிவியல் வாழ்வில் நிர்ணயகரமான ஒன்றாய்க் கோலோச்சுகின்றது. அந்த அறிவார்ந்த செங்கோலைக் கையில் ஏந்தித் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டும் என்பதே வரலாற்று நியதி.



### இனப்படுகொலையை 'கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை' என்று ஏன் சொல்கிறோம்?

இனப்படுகொலை ஏதோ ஒரு நாளில் திடீரென்று நடந்துவிடுவதல்ல. இனப்படுகொலை என்பது எப்போதும் கட்டமைக்கப்பட்ட ஒன்றுதான். கோட்பாட்டு அல்லது வரலாற்றுப் பரிமாணமின்றி ஒருபோதும் இனப்படுகொலை நிகழ முடியாது. அதன்படி, இனப்படுகொலை என்பது எப்போதும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையே ஆகும். இனப்படுகொலையானது தெளிவான தத்துவ அடிப்படையைக் கொண்டிருக்கும். ஆதலால், எப்போதும் இனப்படுகொலை என்பது தவிர்க்க முடியாதவாறு ஒரு தத்துவப் பிரச்சினையா யும் அமைந்திருக்கும்.

'கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை' என்ற பதம் இங்கு வெறும் சட்டப் பதமாக ( *Legal Term*) மட்டும் பயன்படுத்தப்படவில்லை. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை, சூழல் சார்ந்த காரண -காரியங்களுடன் நிகழ்கின்றது. நீண்ட வரலாற்றுப் பரிமாணங்களுடன் கூடிய அரசியல் - பொருளாதார - சமூகத் தேவைகளின் நிமித்தம் அரங்கேறுகின்றது.

கட்டமைப்பு(*structure*) என்பது இங்கே அரசு, அரசியல் யாப்பு, சட்டங்கள், ராணுவம், போலீஸ், நிர்வாகம் போன்ற ஒரு அரசின் அடிப்படைக் கட்டமைப்பையும், சந்தைகள், வேளாண்மை, உற்பத்தி, கல்வி, சுகாதாரம் போன்ற சமூக, பொருளியல் அடிப்படை கட்டமைப்பு களையும் சேர்த்து குறிக்கிறது.



ஒரு தெளிவான தனித்துவம் கொண்ட பண்பாட்டு மக்கள் இனத்தின் தனித்துவத்தை இன, மத, மொழி, பிரதேச அடையாளங்களை, வாழ்வியலை, கட்டமைப்பு ரீதியாக அழிப்பது டன், அரசியல் ரீதியாக அவர்களுக்கென்ற

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# திருகோணமலையில் சோலார் திட்டத்தால்



# பறி போகும் வயல் நிலங்கள்..!

2025,ஜனவரி,03 திருகோணமலை முத்து நகர் விவசாயக்காணிகளை இந்திய சோலார் திட்டத்திற்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து திருகோணமலை பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த முத்து நகர் கிராமத்தில் பல வருட காலமாக தாம் இரு போக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் விவசாய காணிகளும் காணப்படுவதாகவும்



இருப்பினும் குறித்த காணிகளை துறை முக அதிகாரசபைக்கு சொந்தமான காணி என வர்த்தமானியின் அடிப்படையில் கையகப்படுத்திய அரச இயந்திரம் தற்போது அதனை இந்தியா சோலார் திட்டத்திற்கு வளங்க திட்டமிட்டிருப்பதாக அறியக்கிடைத்திருப்பதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்தகாணிகள்விடுவிக்கப்படவேண்டும் அங்கு காணப்படும் குளங்கள் புனரமைத்து தரப்படவேண்டும் எனும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஷன் அக்மீமன மற்றும் சன்முகம் குகதாசன் ஆகியோரிடம்வழங்கிவைக்கப்பட்டும் இருந்தன.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முத்து நகர் பகுதியானது பூர்வீகமாக தமிழ் விவசாயிகள் காலம் காலமாக இரண்டுபோக விவசாய செய்கையில் நெற்செய்கையில் ஈடுபடும் வளம்மிக்க வயல் நிலங்களாக உள்ளன.

குறித்த முத்து நகர் பகுதியில் ஐந்து சிறு குளங்களை கொண்ட 1600ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் 1200 விவசாயிகள் விவசாய செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்50ஏக்கருக்கும் மேற்பட்ட மேட்டு நிலப் பயிர்களுக்கும் இதில் மேற்கொள்ளப்பட்டு சுமார் 5000 குடும்பங்கள் பயனடைகின்றனர்.

குறிப்பாக வடகிழக்கில் சிறுபான்மை சமூகங்களின் விவசாய , குடியிருப்பு காணிகள் கபளீகரம் செய்யப்படுகிறது இதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் நில ஆக்கிரமிப்பு தொடர்வதால் மக்கள் கொந்தளிக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கள் நாட்டை பொறுப்பேற்றதன் பின்பும் கூட தீர்வு இல்லாமல் காணப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய், முத்து நகர், சம்பூர் உள்ளிட்ட தனியார் விவசாய மற்றும் குடியிருப்பு காணிகளை தொல் பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக் களம், இலங்கை துறை முக அதிகார சபை உள்ளிட்ட பல அரச திணைக்களங்கள் பௌத்த பிக்குகள் போன்றோர் அபிவிருத்தி என்ற போர்வையிலும் புனித பூமி என்ற போர்வையிலும் அடாத்தாக நிலங்களை அபகரித்துள்ளனர்.

கடந்தவருடத்தில்(2024) வாரிசௌபாக்கியா திட்டத்தின் கீழ் அரசாங்கம் குளங்களை திருத்த நிதி ஒதுக்கீடு செய்தது தகரவெட்டுவான் குளம் 80 வீதம் திருத்தப்பட்ட நிலையில் இலங்கை துறை முக அதிகார சபையால் நிறுத்தப்பட்டது இதே போல் அம்மன் குளத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு திருத்தம் செய்ய அனுமதியை மறுத்து தடுத்து நிறுத்தியதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர் .



சோலார் பவர் திட்டத்தை எமது விவசாய பகுதிக்குள் நடை முறைப்படுத்தினால் குளங்கள் மூடப்படலாம் எப்படி அபிவிருத்தி செய்வது நாட்டுக்கு வருடந்தோரும் பெரும்போகத்தில் 1600 ஏக்கர் X70 புசல் = 112000 நெல்லை உற்பத்தி செய்து தரும் எமது வாழ்வாதார ஜீவனோபாய வயல் நிலங்கள் பறிக்கப்படுமாக இருந்தால் விவசாயிகளான இத் திட்டத்தை எதிர்த்து போராடுவதன் மூலம் நாம் உயிரை விடவும் ஆயத்தமாக உள்ளோம் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளதால் இந்த சோலர் திட்டம் நிறுத்தப்படவேண்டும் அல்லது அந்த இடத்தை விட்டு வேறு மாற்று இடத்தில் இதனை முன்எடுப்பதே உகந்த நடைமுறையாகும்.

இதுபோன்று 2011, ல் திருகோணமலை, சம்பூர்பகுதியில் அனல் மின் நிலையம் அமைக்க இந்தியா இலங்கை அரசாங்கங்களிடையே 2011 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

எனினும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது வயல் நிலங்களில் சோலார் பொருத்தும் திட்டம் ஒரு பக்கம் உள்ள நிலை யில் அடுத்த ஆக்கிரமிப்பாக குச்சவெளி, வெருகல்

## பா.அரியநேத்திரன்

பகுதிகளில் எவ்வித அறிவித்தலும் இன்றி இரவோடு இரவாக பெயர்ப்பலகையை காட்சிப்படுத்தி இந்த காணிகளில் தொல்லியல் சின்னங்கள் எவையும் இல்லாத நிலையில் தொல்லியல் திணைக்களம் இந்த காணிகளை கையகப்படுத்த முயற்சிப்பதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பிரதேச சபைக்குச் சொந்தமான 1985ஆம் ஆண்டுக்கு முன்னர் கடைத்தொகுதிகளுடன் காணப்பட்ட பகுதியும் மற்றுமொரு இடத்தில் நெற் களஞ்சியமாக காணப்பட்ட பழைய கட்டிடங்களுடன் கூடிய பகுதியையும் தொல்லியலுக் குரிய இடமாக கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதனால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் இதை அனுமதிக்க முடியாது எனவும் மக்கள் தெரிவிக் கின்றனர்.

குறித்த சட்ட விரோதமான செயற்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குச்சவெளி பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் மற்றும் அரசியல்வாதிகளிடமும் இது தொடர்பானமகஜர்களைகையளிக்கவுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதையிட்டு கருத்து தெரிவித்த குச்சவெளி பிரதேச செயலாளர் இது தொடர்பாக தொல்லியல் திணைக்கள திருகோணமலை மாவட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் இது தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது எனவும் அவர்களுடன் கலந்தாலோசித்து தீர்வினை பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.



திரியாய் பகுதியிலும் விவசாய காணிகளை அப்பகுதி விகாராதிபதி ஒருவரான அரிசி மலை பௌத்த பிக்கு அடாவடியாக தனியார் காணிகளுக்குள் அத்து மீறி நிலத்தை உழுது நெற் செய்கைக்காக தயார் படுத்தியதனால் மக்கள் போராட்டம் அங்கு எழுந்தது இது தொடர்பில் உரிய தரப்புக்களுக்கு அறிவித்த போதும் எது வித

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# தீர்வின்றித் தொடரும் கடல்வளச் சுரண்டலுடன் தமிழர் நிலமும் சுரண்டப்படுகிறது

## அன்னலிங்கம் அன்னராசா

**அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்கள நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அன்னலிங்கம் அன்னராசா அவர்கள் முன்வைத்த கருத்துக்களை இலக்கின் வாசகர்களுக் காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான்(Scan) செய்யவும்.**

**அநுர தலைமையிலான கட்சி ஆட்சிக்கு வந்த பின் ஒரு தமிழராக இருக்கின்ற சந்திரசேகரன் அவர்களை தமிழர்கள் பகுதியிலே அமைச்சராக நியமித்துள்ளனர். அவர் அமைச்சராக தெரிவு செய்யப்பட்ட பின் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றதா?**

என்பிபி அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரும் ஆட்சியில் இல்லாமல் இருக்கும் போதும், அமைச்சர் சந்திரசேகரம் வடக்கு மாகாண மீனவர்களுடைய பல போராட்டங்களில் நின்று மீனவருடைய பிரச்சனையை அறிந்தவர்.

வடக்கு மக்களும் ஒரு மாற்றம் வரும்போது அந்த மாற்றத்தின் ஊடாக தங்களுடைய கடலில் தாங்கள் சுதந்திரமாக தொழில் செய்து வாழ்வாதாரத்தில் ஒரு மாற்றம் வரும் என்று நம்பி இருந்தவர்கள்.

ஆனால் இன்றைக்கு அநுர அரசு ஆட்சிக்கு வந்து 45 50 நாள் ஆகின்றது. எதிர்பார்க்கப்பட்ட எந்தவிதமான மாற்றமும் இல்லை. இன்றைக்கு இலங்கை இருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு அவர்கள் இலங்கை என்ற ரீதியில், கடந்த அரசாங்கத்தின் பாதையில்தான் பயணிக்க வேண்டிய ஒரு நிலையில் இருக்கின்றது.

ஆனால் 'இந்த அரசாங்கத்துக்குரிய கால அவகாசம் ஒன்று தேவை.

ஏனென்றால் நீண்ட காலத்துக்கு பிறகு ஆட்சிக்கு வந்த ஒரு அரசாங்கம். அதை அறிந்து கொள்ள வேண்டும். அல்லது அதை புரிந்து கொள்வதற்குரிய கால அவகாசம் தேவை' என்ற கருத்து வடக்கில் சொல்லப்படுகின்றது.

இந்த போர்வையில் மக்கள் அந்த கால அவகாசத்தையும் மூன்று மாசமோ ஆறு மாசத்துக்கோ சரி புதுசா வந்திருக்கிறார்கள். செய்வார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பெரும் எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள்.

ஆனால் என்னை பொறுத்த அளவிலே இது சாத்தியமானதாக கூற முடியாது. உதாரணத்துக்கு கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரம், அந்த பதவியை ஏற்று குறிப்பிட்ட நாட்களிலே இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சனை தொடர்பாக மிகக் காட்டமாக பேசி வந்தார். ஆனால் தற்பொழுது அந்த காட்டம் மெத்தன போக்கை நோக்கி நகர்வதை எங்களால் அறியக்கூடியதாக இருக்கிறது. அதே போன்றுதான் கடந்த அரசாங்கங்கள் கொண்டுவந்த புதிய சட்ட திருத்தத்தை வடக்கு கிழக்கு இலங்கை ஒட்டுமொத்தமாக அந்த சட்ட திருத்தத்தைநிராகரித்தது. ஆனால் இந்த அரசாங்கம் வந்து அதனை அமைச்சரவையிலே போட்டு அங்கீகரித்திருக்கின்றது. அதற்கு ஒரு குழுஅமைத்திருக்கிறது. அது தொடர்பாக இந்த மாசம் 4ம் திகதி நாங்கள் கடற்றொழில் அமைச்சரை சந்தித்து கதைத்தபோது அவர், அதற்குரிய திருப்தியான பதிலை வழங்கவில்லை.

அவர் ஏற்றுமதி சார்ந்தும், வெளிநாடுகளில் ஏற்றுமதி செய்யப்படுகின்ற கடல் உணவுகளுக்கு வெளிநாடுகளின் கோரிக்கையைஏற்றுத்தான் நடக்கவேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டிலே தான் இருந்தார். எனவே ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் கொண்டுவந்த அனைத்து சட்டங்களையும் இந்த அரசாங்கம் பாராளுமன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றத்தான் போகின்றது. ஆனால் கடற்தொழிலாளருக்கு தீர்வு கிடைக்குமா? என்பது கேள்வியே.

**சந்திரசேகரனை நீங்கள் சந்தித்து பேசியதாக கூறுனீர்கள். என்ன பேசப்பட்டது?**

கடற்றொழில் அமைச்சருடன் கலந்துரையாடும் போது, அதிலே புதிய சட்ட திருத்தம் தொடர்பாக அமைச்சரவையிலே கொண்டுவரப்பட்டு அந்த சட்ட திருத்தம் வடக்கு கடற்றொழிலாளர்களுக்குபாதிப்பானதாக இருக்கும் என்று கூறியபோது, அவர் ஒரு கருத்தை முன்வைத்திருக்கின்றார்,

இந்த கடல் உணவுகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதனால் அந்த ஏற்றுமதியாளர்களின் கருத்தைக் கேட்டும் அந்த சட்டங்களை கொண்டு வர வேண்டிய தேவை இருக்கின்றது என்று. அவருடைய கருத்து என்னவென்றால், அநுர அரசாங்கத்தை கொண்டு செல்வதற்கு எப்படி வளங்களை விற்றாலும் பரவாயில்லை. எம் இனத்தை அழித்தாலும் பரவாயில்லை என்பதில் குறிக்கோளாக இருக்கின்றார். ஆனால் கடந்த காலங்களில் பலமாக இருந்து இந்த சட்ட திருத்தத்தை எதிர்த்தவர், எங்களோடு இருந்தவர் இந்த கடற்றொழில் அமைச்சர். ஆனால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் இந்த அரசாங்கம் எங்களுடைய பிரச்சினைகளை தீர்க்குமா? என்று சொன்னால் அது மிகப்பெரிய கேள்விக்குறியான ஒரு விடயமாகத்தான் இருக்கின்றது.

இந்த அரசாங்கங்களின் செயற்பாடு வெளியில் ஒன்றை சொல்வதும் உள்ளே இன்னுமொன்றை நடைமுறைப்படுத்துவதுமாகத்தான் இருக்கின்றது. எங்களுடைய யாழ்ப்பாண புத்தி ஜீவிகளின் ஆலோசனையின் பெயரிலே தான், சரி புதிதாக வந்த ஒரு அரசாங்கம் மூன்று மாதம் அல்லது ஆறு மாதம் அந்த விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும்

என்பதற்காக நாங்கள் மௌனமாக, எந்த நம்பிக்கையில தேர்தலுக்கு முன் இருந்தோமோ அதை நோக்கி எதிர்பார்த்திருக்கின்றோம்.

ஆனால் இன்று நடக்கின்ற நடைமுறை நாட்டிலே எதுவுமே எங்களுக்கு சாத்தியமில்லாத ஒரு சூழ்நிலைதான் இந்த அரசாங்கமும் செய்யப் போகின்றது என்பதையும் கடந்த அரசாங்கங்களை விட மிகப்பெரிய நெருக்கடிகளை இந்த அரசாங் கத்தில் நாங்கள் எதிர்கொள்வோம் என்ற ஒரு மனநிலை எங்களுக்கு தென்படுகிறது.

நாட்டில் நிலைமைகள் அப்படித்தான் இருக்கின்றது. இன்றைக்கு 50 48 நாளாகின்றது அநுர அரசு ஆட்சிப்பொறுப்பேற்று, இன்னும் கற்றுக்கொள்ளவில்லை என்றால் இவர்கள் கற்றுக் கொள்வதற்குரிய காலங்கள் அல்லது நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு இடையில் எங்களுடைய வளங்கள் அல்லது எங்களுடைய வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டு, சுரண்டப்பட்டு விடும், சந்திரசேகரன் அமைச்சர், கடற்றொழிலாளர் பிரச்சினையை அறிந்தவர். ஆனால் இன்றும் இந்திய மீனவர்கள் எங்களுடைய வளத்தையும் வாழ்வாதாரத்தையும் அழித்துக் கொண்டு செல் கின்றார்கள். கைது செய்வதற்கு யாருமில்லை. நேற்றைய தினம், பகல் முல்லைத்தீவு மாவட்டத் திலே பல நூற்றுக்கணக்கான படகுகள் நின்று கடற்றொழிலே ஈடுபடுகிறது. பகல் ஒரு மணி அளவிலே இலங்கையினுடைய கடற்றொழில் பிரதி அமைச்சருக்கு தொலைபேசி ஊடாக நாங்கள் தொடர்பு கொண்டோம். அந்த மாவட்ட உதவிபணிப்பாளருக்கு தொடர்பு கொண்டோம். யாருமே நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே பகலிலே வந்து சுதந்திரமாக எங்களுடைய கடலிலே தொழில் செய்கிற அளவுக்கு இந்த நிலைமை இருக்கின்றது. ஆனால் அரசாங்கம் வாயால மட்டும் வீரம் பேசுகிறது. ஆனால் ஒரு எல்லைக்கு மேல் தமிழர்கள் பொறுக்க மாட்டோம் 'எங்களுடைய வளத்தையும் வாழ்வாதாரத்தையும் காப்பாற்று' என்ற செய்தியை மிக விரைவிலே வடமாகாணம் இந்த அரசாங்கத்திற்கு தெரியப் படுத்தும். அதற்குரிய சந்திப்பாகத்தான் ஜனாதி பதியை சந்திப்பதற்குரிய நேரத்தை நாங்கள் கோரி இருக்கின்றோம். இறுதியாக ஜனாதிபதியோடும் ஒரு நல்லெண்ண ஒரு முயற்சியாக எதிர் பார்க்கிறோம். ஜனாதிபதியை நம்பித்தான் வாக் களித்தார்களே ஒழிய ஏனையவர்களை நம்பி வாக்களிக்கவில்லை. அவரையும் ஒருமுறை சந்தித்து கலந்துரையாடிய பின்பு எமது முடிவை வடக்கு மாகாண மீனவர்கள் கடந்த காலத்தில் எப்படி எங்களுடைய நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தோமோ அதே நிலை தொடரும்.

• • •



# சர்வதேச கல்வித்தினம்

# இலங்கை மக்களையும் சென்றடைய வேண்டும்

சர்வதேசகல்வித்தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 ஆம் திகதி அன்று கொண்டாடப் படுகிறது. இது கல்வியை ஒரு பரந்த கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்றது. உலகெங்கிலும் உள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வியின் தரம் மாறுபட்டாலும், உலகளாவிய ரீதியில் பல மில்லியன் கணக்கான மக்கள் கல்வி தொடர்பான இந்த அடிப்படை மனித உரிமையை இழந்துள்ளனர். ஒவ்வொரு நாட்டிலும் சிறந்த கல்விச் சீர்திருத்தங்களை உருவாக்கி இன, மத, மொழி, பிரதேச பேதமற்ற வகைகளில் அனைவருக்கும் சமமான கல்வி அணுகுமுறைகளை அடையக்கூடிய வகையிலும், அதனை மேம்படுத்துவதற்காகவும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவுமே இந்த நாள் ஐக்கிய நாடுகள் அமையத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு சர்வதேசகல்வித் தினத்திற்கான கருப்பொருள் “AI மற்றும் கல்வி: தன்னியக்க உலகில் மனித நிறுவனத்தைப் பாதுகாத்தல்” என்பதாகும். அமைதி மற்றும் மேம்பாட்டிற்கான கல்வியின் பங்கைக் கொண்டாடும் வகையில்; இந்தநாள் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி, திங்கட்கிழமை, அன்று கொண்டாடப் படுகின்றது.

கல்வி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு, குறிப்பாக செயற்கை நுண்ணறிவு (Artificial Intellegene -AI) ஆகியவற்றுக்கு இடையிலான உறவை மேம்படுத்த இந்த கருப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட்டது.



செயற்கை நுண்ணறிவு என்பது மனித நுண்ணறிவு தேவைப்படும் வகையில் பகுத்தறிவு, கற்றல் மற்றும் செயற்படக்கூடிய கணினிகள் மற்றும் இயந்திரங்களை உருவாக்குவதில் அக்கறை கொண்ட ஒரு அறிவியல் துறையாகும் அல்லது மனிதர்கள் பகுப்பாய்வு செய்யக் கூடிய அளவைவிட அதிகமான தரவை உள்ளடக்கியுள்ளது. இன்றைய நவீன தொழில் நுட்ப உலகில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு என்பது கணினி அறிவியல், தரவு பகுப்பாய்வு மற்றும் புள்ளிவிவரங்கள், வன் பொருள் மற்றும் மென்பொருள் பொறியியல், மொழியியல், நரம்பியல் தத்துவம் மற்றும் உளவியல் உள்ளிட்ட பல விடயங்களை உள்ளடக்கிய ஒரு பரந்த துறையாகும்.

வணிகப் பயன்பாட்டிற்கான செயற்பாட்டு மட்டத்தில், எவ்வாறு AI தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றதோ அந்த அளவுக்கு கல்வித் தொழில் நுட்பத்தில் பொருள் வகைப்படுத்தல், இயற்கை மொழி செயலாக்கம், பரிந்துரைகள், அறிவார்ந்த தரவு மீட்டெடுப்பு மற்றும் பலவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.



**வல்வை.ந.அனந்தராஜ்**

அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் சமமான தரமான கல்வி மற்றும் வாழ்நாள் முழுவதும் வாய்ப்புகளை ஏற்படுத்தி, பாலின சமத்துவத்தை அடைவதிலும், வறுமையின் சுழற்சியை மாற்றி அமைப்பதிலும் ஒவ்வொரு நாடும் கவனம் செலுத்துமாயின், அந்த நாடுகள் எல்லாத் துறைகளிலும் வெற்றிபெறும். ஆனால் கணினி மற்றும் AI மூலம் இயக்கப்படும் அமைப்புகள் அதிநவீனமயப்படுத்தப்படும் பொழுது, மனித நோக்கத்திற்கும் இயந்திரத்தால் இயக்கப்படும் செயலுக்கும் இடையிலான எல்லைகள் பெரும்பாலும் மந்தமடைகின்றன.

### சர்வதேச கல்வித்தின வரலாறு

2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் ஜனவரி 24 சர்வதேச கல்வித்தினமாக அறிவிக்கப்பட்டது, 2018 ஆம் ஆண்டில், டிசம்பர் 3, 2018 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை, நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலம் ஜனவரி 24 சர்வதேச கல்வித்தினமாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, முதல் சர்வதேச கல்வித்தினம் ஜனவரி 24, 2019 அன்று அனுசரிக்கப்பட்டது.

அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 24 சர்வதேச கல்வித்தினமாக கொண்டாடப் படுகிறது. 2025ஆம் ஆண்டு கொண்டாட்டத்தின் ஆறாவது ஆண்டாகும்.

கல்வியைக் கொண்டாடவும், வளர்ச்சி மற்றும் அமைதிக்கான கற்றலின் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்திக்கவும். கல்வியை வழங்குவது கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமல்லாது, தரமான கல்வியை ஊக்குவிக்கும் கடமை நம் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ளது.

யுனெஸ்கோவின் புள்ளிவிவர தரவுகளின் படி, 258 மில்லியன் குழந்தைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆபத்தான விளிம்புநிலையில் உள்ள சமூகங்கள், சமத்துவமின்மையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளவர்கள் மற்றும் வளர்ச்சியடையாத நாடுகளில் வாழும் மக்களின் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால்இன்று உலகம் முழுவதும் வாழும் எண்ணற்ற சமூகங்கள் தமக்குக் கல்வி என்பதே தேவையற்றது என்று நிராகரித்துள்ளன என்பதுதான் கவலைக்குரிய விடயமாக உள்ளது.

சர்வதேச கல்வித்தினம் கொண்டாடப்படும் பொழுது, தனிநபர்கள், சிவில் சமூகம் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோரினால் முன் வைக்கப்படும் கல்வி மறு சீரமைப்புக்கள் குழந்தைகளுக்கு முதனிலைக் கல்வி மற்றும் இடைநிலைக்கல்வி முறையாக வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கும், கல்வியில் இளைஞர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கல்வி அபிவிருத்திட்டங்கள் வெவ்வேறு இன மக்கள் தொகைகளின்தேவைகளுக்காகவடிவமைக்கப்பட வேண்டும், அதேவேளை ஒரு முக்கிய இலக்கை நோக்கி அனைத்துத் திட்டங்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும். பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்து வெளியேறும் மாணவர்களுக்கான உரிய வேலைவாய்ப்பு மற்றும் சிறந்த எதிர்காலத்திற்குத் தேவையான கல்வியை வழங்குவதற்கான மாற்றங்கள் பாடசாலைக் கல்வியிலும், பல்கலைக்கழகக் கல்வி முறையிலும் மாற்றத்தைக் கொண்டுவருவதன் மூலமே சர்வதேச கல்வித்தினத்தின் நோக்கம் வெற்றி அடையும்.

பலத்த எதிர்பார்ப்புக்களுடன் பரபரப்பாக ஆட்சியைக் கைப்பற்றிய ஜனாதிபதி அனுர திசநாயக்காவின் அரசாங்கம் இன்று 100 நாட்கள் கடந்துவிட்ட நிலையில் மக்களின் எதிர்பார்க்கைகளை நிறைவேற்றமுடியாது திண்டாடி வருவதை இன்று பார்க்க முடிகின்றது.



கல்வி அமைச்சராகவும், பிரதம அமைச்சராகவும் நியமிக்கப்பட்ட கலாநிதி ஹருணி அமரசேகரா பதவிக்கு வந்ததும் நாட்டின் தற்போதைய பழைய கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி நவீன உலகிற்கு முகம் கொடுக்கக்கூடிய வகையிலான கல்வி மறுசீரமைப்பைக் கொண்டுவரப் போவதாகவும், கல்வித் துறையில் ஊழல்கள் மோசடிகளை ஒழித்துத் தரமான கல்வியைச் சகல இன மக்களுக்கும் வழங்கப்போவதாகவும் சூளுரைத்தார். ஆனால் பிரித்தானியர்களின் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்திய கல்வித் திட்டத்தில் சிறு சிறு மாற்றங்களை மட்டுமே ஏற்படுத்திப் பயனற்ற கல்வி முறையே இன்றும் நடைமுறையில் உள்ளது.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# கஷ்டப்பிரதேச மாணவர்களின் கல்விச் சவால்கள்

துரைசாமி நடராஜா

இலங்கையின் மலையகப் பகுதிகளில் கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகள் காணப்படுகின்றன. இத்தகைய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது கல்வியை தொடர வேண்டிய நிலையில் உள்ளனர். அத்தோடு சமகால பொருளாதார பின்னடைவுகள் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு மேலும் இடையூறினை ஏற்படுத்தி வருகின்றன. இந்நிலையில் இப்பிரதேச பாடசாலைகளினதும், மாணவர்களினதும் அபிவிருத்தி கருதி அரசாங்கம் காத்திரமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. புதிதாக ஆட்சிபீடமேறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இவ்விடயத்தில் தனது கரிசனையை எவ்வாறு வெளிப்படுத்தப் போகின்றது? என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.



‘கலாசாரத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயனுள்ள விடயங்களை சமூகத்திற்கு பெற்றுக் கொடுப்பது கல்வி. மனிதரிடையே மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர்வது கல்வி’ என்றெல்லாம்கல்விக்குவரைவிலக்கணம் கூறுவார்கள். கல்வி என்பது தனிமனிதன், சமூகம் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு உந்துசக்தியாக விளங்குகின்றது. கல்வி மேலும் பல சாதக விளைவுகளுக்கும் அடித்தளமாக விளங்கும் நிலையில் சமூகங்கள் கல்வியில் உச்சத்தைத் தொடுவதற்கு பல்வேறு திட்டங்களையும் வகுத்து செயற்பட்டு வருகின்றன.



இந்த வகையில் மலையக சமூகத்தின் கல்வி நிலைமைகள் குறித்து நோக்குகின்றபோது இச்சமூகம் கல்வி அடைவுகள் உள்ளிட்ட மேலும் பல விடயங்களிலும் பின்னிலையில் இருந்து வருவது தெரிந்ததேயாகும். மலையகம் பல்வேறு துறைகளிலும் மேம்படுவதற்கு கல்வியில் கூடியளவு கரிசனையை வெளிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. எனினும் மலையக மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு இடையூறாக பல காரணிகள் விளங்குகின்றன. அதிலும் கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகள் மலையகத்தில் அதிகமுள்ள நிலையில் இவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் கொஞ்ச நஞ்சமல்ல என்பதே உண்மையாகும்.

### குண்டும் குழியுமான பாதைகள்

இத்தகைய பிரதேச பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. ஒரேயொரு ஆசிரியர் பல பாடங்களையும் கற்பிக்க வேண்டிய நிலையில் உள்ளார். இன்னும் சில பாடசாலைகளில் துறைசார்ந்த ஆசிரியர்கள் இல்லாத நிலையில் குறித்த ஒரு பாடத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்அப்பாடத்திற்கு மேலதிகமாக வேறுசில பாடங்களையும் கற்பிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். இதேவேளை கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றுக் கொள்ளும் சிலர் தமது செல்வாக்கை பயன்படுத்தி வசதியான பாடசாலைகளுக்கு இடமாற்றத்தினை பெற்றுக் கொள்ளும் ஒரு நிலைமையும் இல்லாமலில்லை. இதன் காரணமாக ஆசிரியர் பற்றாக்குறையால் தொடர்ந்தும் இத்தகைய பிரதேச மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாகி வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



இதேவேளை கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களுக்கு செல்லும் பாதைகள் குண்டும் குழியுமாக காணப்படுகின்றன. இப்பாதையில் பெரும்பாலும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டி சேவையில் ஈடுபடுத்தப்படாத நிலையில் தனியார் பஸ் உரிமையாளர்களின் ஆதிக்கமே வலுப்பெற்று வருகின்றது. போக்குவரத்து கட்டணங்களை தனியார் பஸ் வண்டி உரிமையாளர்கள் அளவுக்கு அதிகமாக அறவிடுவதாகவும் பல இடங்களில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகவும் கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் செல்வதில் சிக்கல்களுக்கு முகம் கொடு த்து வருகின்றனர். ஆசிரியர்கள் தங்களின் குறைந்த வருமானத்துக்கு மத்தியில் போக்குவரத்துக்கென்று அதிகமான தொகை யினை செலவிட வேண்டியுள்ளதால் அவர் கள் பொருளாதார ரீதியில் திக்குமுக்காடி வருகின்ற னர்.



அத்தோடு கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களில் சேவையில் ஈடுபட்டுவரும் பஸ் வண்டிகள் பாதைச்சீர்கேட்டை காரணங்காட்டி சேவையை அடிக்கடி இடைநிறுத்திக் கொள்வதையும் அவதானிக்க முடிகின்றது. இத்தகையதொரு சூழ்நிலையில் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்படுவதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இவற்றுக்கும் மத்தியில் பல்வேறு இடையூறுகள் இருந்த போதிலும் கூட சிறப்பான சேவையினை வழங்கும் அர்ப்பணிப்புமிக்க தனியார் பஸ் வண்டி உரிமையாளர்களையும் நாம் பாராட்டியே ஆகவேண்டும். கண்இது ஒரு புறமிருக்க கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களில் ஆரம்பப்பிரிவு பாடசாலைகளே அதிகமாக காணப்படுகின்றன. இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் உயர் கல்வியை பெற்றுக் கொள்ளும் பொருட்டு பல கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள நகர்ப்புற பாடசாலைகளுக்கே செல்ல வேண்டியுள்ளது. எனினும் போக்குவரத்து உள்ளிட்ட சிரமங்களால் பல மாணவர்கள் உயர் கல்வியைப் பயிலாது இடைநடுவில் கல்வியைக் கைவிடும் அல்லது இடைவிலகும் ஒரு போக்கு காணப்படுகின்றது. இது மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்த வல்லதாகும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒரு விடயமல்ல.

### மாணவர் இடைவிலகல்

2012/2013 ம் ஆண்டின் தகவல் ஒன்றுக்கமைய பெருந்தோட்டப் பகுதிகளில் பாடசாலைக்குச் செல்லாதோர் வீதமானது 12.2 ஆகக் காணப்பட்டது. அதே ஆண்டில் நகர்ப்புறத்தில் 2.2 சதவீதமானோரும், கிராமப்புறத்தில் 3.5 சதவீதமானோரும் பாடசாலைக்கு செல்லாதிருந்தனர். இதேவேளை தேசிய மட்டத்தில் 3.7 சதவீதமானோர் பாடசாலைக்கு செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் 2012/2013 ம் ஆண்டில் பெருந்தோட்டத்துறையில் ஐந்தாம் தரம் வரை பயின்றோர் 42 வீதமாகவும், 6 தொடக்கம் 10 ஆம் தரம் வரை பயின்றோர் 38.07 வீதமாகவும், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை பயின்றோர் 4.09 வீதமாகவும், கல்விப் பொதுத் தராதர உயர்தரம் வரை பயின்றோர் 2.2 வீதமாகவும் இருந்தனர். பெருந்தோட்டப் பகுதிகளில் பாடசாலைக்குச் செல்லாதோர் நகரம் மற்றும் கிராமத்தைக் காட்டிலும் 4 தொடக்கம் 6 மடங்கு அதிகமாகும் என்றும் தகவலொன்று வலியுறுத்துகின்றது. இந்நிலையில் மாணவர் இடைவிலகும் நிலைமைகள் கல்வித் துறையில்



தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# ஒரு திரை நாயகனும் ஒரு நிஜ நாயகனும்

ஈழத்தில் தமிழினம் அநாதையாக ஆதரவின்றி தவித்துக் கொண்டிருக்கையிலே, உதவிக் கரம் நீட்டி உறுதியாய்த் துணை நின்ற புரட்சித் தலைவனே' என்று தொடங்குகிறது, எம்.ஜி.ஆர். மறைவுக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்திய பிரபாகரனின் அறிக்கை. எம்.ஜி.ஆரின் 37வது நினைவு தினமான டிசம்பர் 24-ம் தேதியன்று, பிரபாகரனின் அறிக்கையை முழுக்க படிக்க நேர்ந்த போது, அவர்கள் இருவக்கிடையிலான இதயப் பிணைப்பை உணர முடிந்தது. ஒளிவு மறைவில்லாமல் உள்ளதை உள்ளபடி சுருக்க மாகச் சொல்ல வேண்டும் என்றால் இரண்டே வரிகளில் முடித்துவிடலாம். எம்.ஜி.ஆர், சினிமா வில் மாவீரனாக ஜொலித்தவர். பிரபாகரன், நிஜவாழ்க்கையில் மாவீரனாக திகழ்ந்தவர் .

வெள்ளித்திரையில் புரட்சிகரமான கரு த்துகளையும், எளிய மக்களுக்கு ஆதரவான பாடல்- வசனங்களையும், தொடர்ந்து தெரிவித்து வந்தவர் எம்.ஜி.ஆர். அவர் சொன்ன கருத்து களுக்கு நிஜ வடிவம் கொடுத்தவர் பிரபாகரன். இதுதான் பிரபாகரன் மீதான ஈர்ப்புக்கு அடிப் படையாக இருந்திருக்க வேண்டும். "இங்கு ஊமைகள் ஏங்கவும் உண்மைகள் தூங்கவும் நானா பார்த்திருப்பேன்" என்பது எம்.ஜி.ஆரின் பிரபல திரைப்படப் பாடல் வரி. அதற்கு முகவரி கொடுப்பதாக இருந்தது, பிரபாகரனின் ஒவ்வொரு நடவடிக்கையும்! இதையெல்லாம் தொடர்ந்து கவனித்து வந்தார் எம்.ஜி.ஆர் .

1984 இன் தொடக்கத்தில் பிரபாகரனை சந்திக்க எம்.ஜி.ஆர் விரும்பிய போது, பால சிங்கத்தைத் தான் அனுப்பி வைத்தார் பிரபாகரன். ஈழப் பிரச்சினையை முன்வைத்து நடந்த அரசியல் சதுரங்கத்திலிருந்து விலகி நிற்க வேண்டுமென்கிற பிரபாகரனின்நேர்மையானநிலைப்பாடேஅதற்கு காரணம். தன்னைச் சந்தித்த பாலசிங்கத்திடம் உங்களது நோக்கம் நிறைவேற எவ்வளவு பணம் தேவைப்படும் என்று எம்.ஜி.ஆர் கேட்டதும், அந்த அதிரடி கேள்விக்கு உடனடி பதில் சொல்ல முடியாது பாலசிங்கம் திகைத்ததும், உடனிருந்த சங்கர் 1000 போராளிகளுக்கு பயிற்சி, ஆயுதங்கள் ஆகியவற்றுக்கு 2 கோடி ரூபாய் தேவைப்படும் என்று கூறியதும், மறுநாளே அதைக் கொடுப்பதாக எம்.ஜி.ஆர் உறுதியளித்ததும், அடுத்த நாள் இரவே தன்னுடைய சொந்த பணம் 2 கோடி ரூபாயை பாலசிங்கத்திடம் ஒப்படைத்ததும் , ஈழ விடுதலைப் போரில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டிய வரலாறு. இந்த 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டது எந்த ஆண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.



புகழேந்தி தங்கராஜ்
இயக்குனர்

1984. இன்றைக்கு மிகச்சரியாக 40 ஆண்டு களுக்கு முன்பு. இப்போது அதன் மதிப்பு என்ன என்பதைக் கூட்டிப்பெருக்கிக் கணக்கு பார்க்கிற எவருக்கும் ' பொன் மனச் செம்மல்' என்ற சிறப்பு அடைமொழிக்கு எம். ஜி.ஆர் எவ்வளவு பொருத்தமானவர் என்பது புரியும். எம்.ஜி.ஆர் கொடுத்த 2 கோடி ரூபாய் பிரபாகரனையும் தோழர்களையும் மகிழ்ச்சி அதிர்ச்சியில் ஆழ்த்துகிறது. அதற்குப் பிறகே, நன்றி சொல்வதற்காக சந்தித்தார் பிரபாகரன். வாசலிலேயே நின்று வரவேற்ற எம்.ஜி.ஆர் 'தம்பி' என்று உரிமையுடன் அழைத்தார் பிரபாகரனை . அந்த முதல் சந்திப்பு நீண்டகாலம் பிரிந்திருந்து மீண்டும் சந்தித்த அண்ணன்- தம்பி சந்திப்பு போல் இருந்தது என்கிறது வரலாறு. 'It is some chemistry ' என்கிறார் எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன் . அந்த chemistry திரையில் , திரைக்கதையில் , தன்னை எப்படிச் சித்தரிக்கிறார்களோ, அதேபோன்று வாழ்ந்து வருகிற ஒரு நிஜமான வீரனை நேரில் பார்த்ததால் ஏற்பட்ட சிலிர்ப்பை அடிப்படையாக கொண்டது. அவர் திரை நாயகன் . இவர் நிஜ நாயகன். ஏதோ ஒரு chemistry என்கிற வெற்று வார்த்தைக்குள் எம். ஜி.ஆர் - பிரபாகரன் பிணைப்பு அடங்கி விடாது.

2 கோடி கொடுத்ததுடன் நில்லாமல் , 'எப்போது என்ன உதவி வேண்டுமானாலும் என்னிடம் தயங்காமல் கேளுங்கள்' என்று பிரபாகரனிடம் எம்.ஜி.ஆர் சொன்னதில் துளிக்கூட நடிப்பு கிடையாது.

இந்த விடுதலைப் போராட்டத்துக்கும், இத்தகைய மாவீரர்களுக்கும் முடிந்ததையெல் லாம் செய்ய வேண்டும் என்று நினைத்த ஒரு மெய்யான கலைஞனின் தவிப்பு. அப்போது மட்டுமல்ல..... அகிம்சைப் போராட்டத்தை வழி நடத்திய தந்தை செல்வாவைச் சந்தித்த போதும், இதே உறுதியுடனும் நெகிழ்ச்சியுடனும் தான் இருந்தார் எம்.ஜி.ஆர். அதை நினைவு கூர்வது மிகமிக முக்கியமானது. பௌத்த சிங்கள பேரினவாத அரசால் ஈழத்தமிழர்கள் அனுபவித்த கொடுமைகள் குறித்து, தமிழகத் தலைவர்களை நேரில் சந்தித்து எடுத்துரைப்பதற்காக வந்த தந்தை செல்வா, எம்.ஜி.ஆரையும் சந்தித்தார். அப்போது எம்.ஜி.ஆர் தனித் தன்மை கொண்ட தலைவர் இல்லை. அரசியலில் ஈடுபட்ட திரைப்பட ஹீரோ மட்டுமே! தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு ஏவி விடும் வன்முறைகளையும், கொலை வெறியாட்டத்தையும், செல்வா எடுத்துச் சொல்லச் சொல்ல,உணர்ச்சிப் பிழம்பாகி விட்டார் எம்.ஜி.ஆர் . மெலிவான தேகத்துடன் இருந்த அந்த அகிம்சாவாதியின் கைகளைப் பற்றியபடி , ' உங்களுக்குப் பணம் வேண்டுமா, ஆயுதம் வேண்டுமா ' என்று எம். ஜி.ஆர் கேட்டதில் எந்த உள்நோக்கமும் இல்லை. ஒரு நிஜமான மக்கள் கலைஞனின் கருணை யும் கண்ணீரும் தான் இருந்தது. எம்.ஜி.ஆர் தொடர் பான நிகழ்வுகளை எழுதுகிற இந்த நொடியில் அவருக்கும் எனக்குமிடையே நடந்த ஒரு மறைமுக மோதலைக் குறிப்பிடவேண்டியது அவசியமென்று கருதுகிறேன். அது மாநிலக் கல்லூரியில் நான் எம்.ஏ.படித்துக் கொண்டிருந்த நேரம். தமிழகமெங்கும் தொடர்ந்த மாணவர் போராட்டத்தையடுத்து, மாநிலம் முழுக்க கல்லூரிகள் காலவரையின்றி மூடப்படுவதாக அறிவிக்கிறார் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# மக்களால் நிராகரிக்கப் பட்டவர்களை அழைப்பதில் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும்

**இராசன் காந்தி**
சமூக செயற்பாட்டாளர், தமிழ் நாடு.

கடந்த சில வருடங்களாக அயலக தமிழர் தினம் தமிழக அரசால் கொண்டாடப்பட்டு வருகின்றது. விழாவில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றது ஒவ்வொரு ஆண்டும் விழாவில் பங்கு கொள்ள பல்வேறு நாடுகளில் வசிக்கும் தலைவர்கள், தமிழர்கள் என்று பலரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கிறார்கள். இந்த முறை இலங்கையில் இருந்து திரு. சுமந்திரன் கலந்து கொண்டு உள்ளார், திரு. சுமந்திரன் போன்றவர்கள் அங்கு இருக்கும் மக்களின் அரசியலுக்கு எதிராகவும், மக்கள் புறக்கணிப்பு செய்யப்பட்டவர்.



தொடர்ந்து ஈழ மக்களின் அரசியலுக்கு எதிராக செயல்பட்டு வருபவர். தொடர்ந்து தமிழரசு கட்சி தலைமைக்கு போட்டியிட்டு தோற்றவரும், கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் திரு. சுமந்திரன் தோற்கடிக்கப்பட்டு தமிழரால் நிராகரிக்கப்பட்டவர். திரு, சுமந்திரனின் அவர்கள் நம்பிக்கைத் துரோகத்தின் காரணமாக தமிழ் மக்களால் பாரியளவில் நிராகரிக்கப்பட்டுள்ளார்என்பதைசனநாயகத்தின்மீதுநம்பிக்கைஉள்ளவர்கள் புரிந்து கொள்ள முடியும் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்டவரை அயலக தமிழர் விழாவிற்கு விருந்தினராக அழைத்தது மட்டும் இல்லாமல் திமுக துணை பொதுச்செயலாளர் கனிமொழி அவர்கள் சந்தித்தது புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தமிழக அரசு அங்கீகாரம் தருவது ஈழ மக்களுக்கு அரசியலுக்கு எதிராக தான் முடியும்.



இனப்படுகொலைப் போருக்கு பின் நடைபெறும் காணாமல் ஆக்கப்பட்டோர் அறப்போராட்டத்திற்கு துணை நின்று இருக்கலாம், அல்லது சட்டம் பயின்ற சட்டத்தரணி என்ற வகையில் சட்டபோரட்டம் நடத்தி இருக்கலாம் ஆனால் கிட்டத்தட்ட 15 பாராளுமன்ற அவையில் இருந்தும் ஈழ மக்களுக்கு ஆதரவாக இல்லாமல் அந்த மக்களுக்கு எதிராக நின்றது மட்டும் இல்லாமல் பெரும்பாலும் சிங்களத் தரப்புடன் இணக்கப்போக்கில் தான் அரசியல் முன்னெடுப்புகள் செய்தார்.

இனப்படுகொலைக்குப் பின்பு முக்கியமான 15 ஆண்டுகளை வீணடித்து, தமிழர்கள் இறையாண்மை மற்றும் சுயநிர்ணயத்தை நோக்கி முன்னேறிச் செல்லவிடாமல் தமிழ் சமூகத்தை அவர் தவறாக பாதைக்கு அழைத்து சென்றதாலே தான் மக்களாலும் தலைவர் பொறுப்புக்கு தோற்கடிக்கப்பட்டார். சிங்கள நலன்களுக்குப் பினாமியாகச் செயற்படும் சுமந்திரன், தமிழர் சுதந்திரம் மற்றும் சுயாட்சியை தீவிரமாகக் குழிதோண்டிப் புதைத்து, தனது தலைமையின் மீது சமூகத்தின் நம்பிக்கையை இழந்து உள்ளார். சுமந்திரன் போன்றவர்களை நிராகரித்த ஈழத் தமிழர்களின் குரலுக்கு தமிழக அரசு மதிப்பு அளிக்கவேண்டும். சுதந்திரம், சுயாட்சி, கூட்டாட்சியை நோக்கி உண்மையாக உழைக்கும் தமிழ்த் தலைவர்களை இதுபோன்ற நிகழ்வுகளுக்கு அழைக்கவேண்டும்..



தமிழர் இறையாண்மைக்கு எதிராக வரலாற்று ரீதியில் செயற்பட கூடிய திரு. சுமந்திரன் போன்ற தனிநபர்கள் அல்லது குழுக்களுடன் இணைந்ததாக கருதக்கூடிய நபர்களை புறம்தள்ள வேண்டும். ஈழத் தமிழர்கள் போர்க் குற்றத்துக்கான நீதி, பொறுப்புக்கூறல், இறை யாண்மை போன்றவற்றில் உறுதியாக இருக்கிறார்கள். இந்த நிலையில் சுமந்திரன் போன்ற தனிமனிதர்களுடனான எந்தவொரு தொடர்பும் தமிழர் போராட்டத்தை அவமதிப்பது மட்டு மன்றி, தமிழ்நாட்டுத் தலைமையை ஈழத் தமிழர் பிரச்சினையிலிருந்து அந்நியப்படுத்தத் தான் செய்யும் என்பதை தமிழகத்தை ஆளும் திமுக அரசு புரிந்து கொள்ளவேண்டும்.

இனிவரும் காலங்களில் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களை தமிழக அரசு விருந்தினராக அழைக்ககூடாது, அவ்வாறு அழைப்பது அந்த நாட்டில் வாழும் மக்கள் தமிழக அரசு மீது அதிருப்தி கொள்ள நேரிடும், இது ஈழத்திற்கு மட்டும் அல்ல உலகம் எங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்மக்களுக்கும் பொருந்தும். அரசுக்காக மக்களாக தான் அரசு, அரசுக்க மக்கள் இல்லை என்னும் வாக்கியத்தை நினைவில் கொண்டு சமூகநீதி அரசு என்று பறைசற்றிகொள்ளும் ஆளும் அரசு மக்களால் புறக்கணிப்பு செய்தவர்களை புறக்கணித்து மக்களை வென்று எடுக்க வேண்டும்.

• • •

# கிட்டுவும் சீப்பியோவும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ரோமப் பேரரசில் சீப்பியோ (Scipio) என்ற புகழ்பெற்ற படைத்தளபதி இருந்தார். அவர் பயணித்த கப்பல் காற்று சாதகமாக வீசாததால் எதிரிகளின் கரைப்பக்கம் ஒதுங்கியது, உடனே எந்த கலக்கமும் இல்லாமல் தனது வாளை எடுத்து தனது உடலில் பாய்ச்சினார்.

எதிரிகள் கப்பலில் புகுந்து உங்கள் தளபதி எங்கே என்று கேட்டனர். அதற்கு சீப்பியோ “தளபதி மிக நல்ல நிலையில் இருக்கிறார்” ( *All is well with the commander* ) என்று கூறி வீரமரணம் அடைந்தார்.

இந்நிகழ்வை அன்றைய புகழ்பெற்ற தத்துவ மேதை செனக்கா (Seneca) இவ்வாறு புகழ்கிறார்.

“சீப்பியோவும் தந்தை வீழ்த்த முடியாது என நினைத்த எதிரி நாடான கார்தேசை (Carthage) வீழ்த்தினார். ஆனால் அவரின் மகன் அதைவிட பெரிய சாதனையை செய்திருக்கிறான். ஒரு நாட்டைக் கைப்பற்றுவது எளிது, ஆனால் இறப்பைக் கைப்பற்றுவதுதான் மிகக்கடினமானது.

ஒரு தளபதிக்கு இதைவிட சிறந்த இறப்பு இருக்க முடியாது” என்கிறார். செனக்கா சாதாரண மனிதர் இல்லை.

அவர் நம்மூர் வள்ளுவர் போன்று அறம் சார்ந்த மேதை, பல புகழ்பெற்ற தத்துவ நூல்களை எழுதி இருக்கிறார். அவர் இன்றும் மேற்குலகில் உயர்ந்த தத்துவமேதையாகப் பார்க்கப்படுகிறார்.

ஏன் அவ்வாறான இறப்பு உயர்ந்தது என்பதற்கு ஆழமான அறம் சார்ந்த கருத்துக்களை வைக்கிறார். அது மிகபெரிய விளக்கம் என்பதால் அதை இன்னொரு பதிவில் பார்ப்போம்.





தளபதி கிட்டுவின் இறப்பும் சீப்பியோ போன்றதுதான். சொல்லப்போனால் கிட்டுவைப் போல இறப்பை வென்ற போராளிகளின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டும். செனக்காவின் கருத்திலிருந்து நாம் உணரவேண்டியது இதுதான்.

இராசராசன் போர் புரிந்து கங்கை கடாரம் என பல வெற்றிகளைப் பெற்றிருக்கலாம், ஆனால் கிட்டு பெற்ற வெற்றி அதைவிட மிகப்பெரியது.

சீப்பியோவின் வெற்றியை செனக்கா புகழ்கிறார், அதுபோல கிட்டுவின் வெற்றியும் புகழப்பட வேண்டியது. ஆனால் கிட்டுவின் அறத்தை புரிந்து கொள்ளும் நிலையில் தமிழ் சமூகம் இல்லை.

ஊழல்வாதிகள், சாமியார்கள்தான் உயர்ந்த அறம் கொண்டவர்கள் போல பார்க்கப்படுகிறார்கள். தமிழ் சமூகம் அறத்தில் வீழ்ந்து கிடக்கிறது. இல்லை, அறம் என்றால் என்ன என்றே தெரியாத நிலையில் இருக்கிறது.

இன்று திருவள்ளுவர் இருந்திருந்தால் கிட்டு விற்கென்றே தனி அதிகாரம் எழுதி இருப்பார்.

*It was a great deed to conquer Carthage, but a greater deed to conquer death. “All is well with the commander!” Ought a general to die otherwise, especially one of Cato’s generals?*
*- Seneca in “Moral Letters to Lucilius”*

**சேது இராமலிங்கம்**

# 2024: எதிரிகளை நண்பர்களாக்கிய ஆண்டு:





## புதிய எதிரிகளை உருவாக்கிய ஆண்டு

### இறுதிப் பகுதி

தமிழில்: **ஜெயந்திரன்**

#### காஸா: ஒரு முடிவற்ற போர்

உண்மையில் காஸாவின் இன்றைய நிலைமை மிகவும் கவலைக்குரியதாகவே இருக்கிறது. தற்போது அங்கே நடைபெற்று வருகின்ற போர், 2023 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ம் தகதி, ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலுக்குள் ஊடுருவி மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அந்தத் தாக்குதலில் 1100 இஸ்ரேலியர் கொல்லப்பட, 250 பேர் பணயக் கைதிகளாகப் பிடித்துச்செல்லப்பட்டார்கள். அந்தத் தாக்குதலுக்குப் பின்னர் ஹமாஸ் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக நடத்தி வரும் தாக்குதலில் 44000 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதில் பெரும்பாலானவர்கள் அப்பாவிப் பொது மக்கள் ஆவார். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கை ஹமாசின் நிர்வாகத்தில் உள்ள சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கிறது. பல சுயாதீன உதவி நிறுவனங்கள் இந்த எண்ணிக்கையை உறுதிப்படுத்தியிருக்கின்றன. ஹமாசின் இராணுவ பலத்தை பெருமளவில் தாம் அழித்துவிட்டதாக இஸ்ரேல் மார்தட்டுகிறது. இன்று 15 மாதங்கள் கடந்து விட்ட நிலையில், காஸாவின் பெரும்பகுதி முற்றாக அழிந்து சுடுகாடாகக் காட்சியளிக்கிறது. அங்குள்ள மொத்த 2.4 மில்லியன்கள் சனத் தொகையில், ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் இப்போரின் காரணமாக பல தடவைகள் இடப் பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அகதிகளில் பெரும்பாலானோர் கூடாரங்களுக்குள், மிகவும் மோசமான சூழலில் வாழ்ந்து வருகிறார்கள். கோடை காலத்தில் பாம்பு, தேள், சொறி சிரங்கு போன்றவற்றின் பாதிப்புகளுக்கும், குளிர் காலத்தில் சீரற்ற காலநிலைகளாலும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.



கட்டார், எகிப்து, அமெரிக்கா, இன்னும் பலரால் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியைத் தழுவியிருக்கின்றன. ஹமாசின் இராணுவ பலத்தை தாம் முற்றாக ஒழிப்போம் என்று இஸ்ரேல் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில், ஹமாசின் ஆட்பலம் கணிசமான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. இருப்பினும் போர் இன்னுமே முடிவுக்கு வரவில்லை என்பது மட்டுமன்றி, கட்டடங்கள் மீது இஸ்ரேல் விமானங்கள் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் இன்னும் தொடர்ந்துகொண்டு தான் இருக்கின்றன.

சண்டைகள் ஒரு முடிவுக்கு வந்த பின்னர் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்றோ, 18 வருடங்களாக நீடித்த ஹமாஸ் ஆட்சியின் பின்னர் அதனை யார் ஆளப் போகிறார்கள் என்பது தொடர்பாகவோ இன்னும் முடிவாகவில்லை. உண்மையில் காஸாவைப் பொறுத்தவரையில் மத்திய கிழக்குப் பிரதேசத்தில், வேறு பல போர்கள் ஏற்படக் காரணமாக அமைந்திருக்கிறது. இஸ்ரேலுக்கும் லெபனான், யேமன், ஈரான், சிரியா ஆகிய நாடுகளுக்கிடையே பல சண்டைகள் ஏற்கனவே நடைபெற்றிருக்கின்றன.



#### ஈரானும் அதன் கூட்டாளிகளும்

மத்திய கிழக்கில் பல்வேறு இராணுவக் குழுக்களுக்கு ஈரான் ஆதரவளித்து வருகிறது. இவ்வாறான இராணுவக் குழுக்களுக்கு நிதியுதவி, ஈரானின் புரட்சிகர காவல் படையின் ஒரு பிரிவாக விளங்குகின்ற கட்ஸ் படைகள் (*Quds Forces*) என்று அழைக்கப்படும் பிரிவின் ஊடாக நிதியுதவி, ஆயுதம் மற்றும் பயிற்சி என்பவற்றை ஈரான் இவ்வாறான இராணுவக் குழுக்களுக்கு வழங்கிவருகிறது. இவ்வாறான இராணுவக் குழுக்கள் அனைத்துமே இஸ்ரேல் அரசுக்கு எதிரானவை என்பது மட்டுமன்றி தனது 'எதிர்ப்பு அச்சு" என்று இவற்றை ஈரான் அழைத்து வருகிறது.

லெபனானை எடுத்துக் கொண்டால், அங்குள்ள பலமான படை எதுவென்று பார்க்கும் போது, அது லெபனானின் தேசிய இராணுவமோ அன்றேல், தெற்கில் நிலைகொண்டிருக்கும் ஐக்கிய நாடுகளின் துருப்புகளோ அல்ல. மாறாக உயர் தொழில்நுட்ப வலுமிக்க ஏவுகணைகள், ரொக்கொட்டுகள் போன்றவற்றை ஈரானிடமிருந்து பெற்றுப் பலமாக இருக்கின்ற ஹிஸ்பொல்லாவே தற்போது அங்குள்ள முக்கிய இராணுவக் குழு ஆகும்.



2023ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8ம் திகதி, காஸாவிலுள்ள தனது சகோதர ஆயுதக் குழுக்களுடன் இணைந்து, இஸ்ரேலின் மீது ரொக்கெட்டுகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் ஆகியவற்றின் உதவியுடன் ஹிஸ்பொல்லா கடும் தாக்குதல்களைத் தொடங்கியது.

2024ம் ஆண்டு, செப்ரெம்பர் மாதத்தில், தனது போர் இலக்குகளை இஸ்ரேல் மாற்றத் தொடங்கியது. 60000 இஸ்ரேலியர்கள் மீள் திரும்ப வழிசெய்யும் வகையில், எல்லைப் பகுதயிலிருந்து ஹிஸ்பொல்லாவை அப்புறப்படுத்தும் செயற்பாட்டில் இஸ்ரேல் இறங்கியது.

வெளிநாடுகளில் இயங்கும் இஸ்ரேலிய உளவு அமைப்பான மொஸாட்டின் உதவியுடனும், தனது இராணுவம் மற்றும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளின் உதவியுடனும், இஸ்ரேல், ஹிஸ்பொல்லா மீது மிகக் கடுமையான தாக்குதல்களைத் தொடுத்தது. இந்தத் தாக்குதல்களின் காரணமாக, ஹிஸ்பொல்லாவின் நீண்ட காலத் தலைவரைக் கொலை செய்ததுடன், அதன் தொலைத்தொடர்பு சாதனங்களையும் அழித்து, ஏனைய அதன் ஆயுதங்களையும் அழித்தொழித்தது. நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்தத்துக்கு முன்னர் நடைபெற்ற போரில், ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

இஸ்ரேல் காஸாவில் ஹமாசுடனும்,

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## கஷ்டப்பிரதேச... தொடர்ச்சி ...

பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.



இதேவேளை பாடசாலைகளில் இருந் தும் இடைவிலகும் மாணவர்கள் வீதியில் வெறுமனே சுற்றித் திரிவதையும் அவதானிக்க முடிகின்றது. இவர்களில் சிலர் சமூக விரோத செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் குடும்பத்தினர் பல்வேறு சிக்கல்களுக் கும் முகம் கொடுக்கும் நிலையில் சமூகத்தின் அவப்பெயரையும் சுமக்க வேண்டிய துர்ப் பாக்கியநிலை ஏற்படுகின்றது. இதனால் மாணவர் சமுதாயம் பாரிய பின்னடைவை சந்திக்க நேரிடும் என்பதையும் மறுப்பதற்கில்லை. அத்தோடு இடைவிலகும் மாணவர்கள் சிலர் நகர்ப்புறத்தில் கீழ்நிலைத் தொழில்களில் ஈடு பட்டு உழைத்து வருகின்றனர். இந்நிலையில் இவர்கள் கலாசார சீர்கேடுகள் பலவற்றுக்கும் முகம் கொடுத்து வருகின்ற நிலையில் இதனால் சமூகச் சீரழிவுகளும் அதிகமாகவே இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை நாட்டின் சமகால பொரு ளாதார நெருக்கடிக்கு மத்தியில் சிறுவர்க ளும் பெண்களும் வெகுவாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். பல சிறுவர்கள் போஷாக் கின்மை காரணமாக பல்வேறு கொடிய நோய் நொடிகளுக்கும் ஆளாகி வருவதுடன் கற்றலிலும் அது தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. மந்த போஷணமும் அதிகரித்துள் ளது. இந்நிலை காரணமாக பாடசாலை மாண வர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்ட த்தை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட நிலையில் அதற்கான கொடுப் பனவுகளும் திருத்தியமைக்கப் பட்டுள்ளன. இது வரவேற்கத்தக்கதொரு விடயமாகும்.

### உணவு வழங்கலில் தாக்கம்

இதனால் மாணவர்கள் சாதக விளைவுகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புள்ளது. எனினும் கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசா லைகளில் உணவு வழங்கலில் இடர்பாடுகள் எதிர்கொள்ளப்படுகின்றன. உணவு வழங்கு வோரை தெரிவு செய்வதிலும் இடர்பாடுகள் எதிர்கொள்ளப்படுகின்றன. இதேவேளை போக்குவரத்து உள்ளிட்ட பல பிரச்சினைகளும் உணவு வழங்கலில் தாக்கம் செலுத்தி வருவதாக அதிபர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மலை யகம் மேன்மை பெறுவதற்கு கல்வி அபி விருத்தி மிகவும் இன்றியமையாததாகும். இதன் ஊடாகவே பல்வேறு சவால்களையும் சமாளிக் கும் அல்லது வெற்றி கொள்ளும் நிலைமை உருவாகும்.

மலையகத்தின் ஆரம்பக்கல்விப் போக்கு கள் ஓரளவு திருப்தி தருவனவாக இருந்தபோதும் உயர்கல்வி நிலைமைகள் இன்னும் விருத்தி செய்யப்படுதல் வேண்டும். இதனிடையே கல்வி



அபிவிருத்திக்கு தோள்கொடுக்கும் கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் பலவற்றையும் கவனத்தில் கொண்டு அவற்றை தீர்த்துவைக்க அரசாங்கம் முற்படுதல் வேண்டும். தற்போது ஆட்சிபீட மேறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதற்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். இதேவேளை மலையக சமூகத்தில் இருந்து மேலெழுந்த நலன்விரும்பிகளும் இச்சிறப்பு பணிக்கு தம்மாலான உச்சகட்ட பங்களிப்பினை வழங்க முன்வருவது மிகமிக அவசியமாகும் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

• • •

## இது சிங்கள ... தொடர்ச்சி ...

வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார்.

"அவ்வாறு இல்லாமல் எமது கரங்களை உடைத்துக் கொண்டு செல்ல முற்பட்டால் வாழ்வதற்கு தனியான உலகை தேடிக்கொள்ள நேரிடும்" என்றும் எச்சரித்த மேர்வின் சில்வா, "அதற்காகவே 'மேர்வின் சில்வா' போன்றவர்கள் இருக்கின்றார்கள்" என்றும் "வடக்கு, கிழக்கு, தெற்கு என்றில்லை இது ஒரு நாடு. பௌத்த சாசனம் இங்கு பாதுகாக்கப்பட வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார்.

"அதற்கு எதிராக ஆட்சியாளர்கள் செயற் பட்டால் இயற்கை நிச்சயம் அவர்களைத் தண்டிக்கும்" என்றும் மேர்வின் சில்வா கடுமை யாக எச்சரித்தார்.

## தாய்வானுக்கு ... தொடர்ச்சி ...

ஒரு சமச்சீரற்ற கள முனையை எதிர் கொள்ளும் முக மாக நாம் தாய்வானை பலப் படுத்த வேண்டும். நடமாடும் ஏவுகணைத் தளங் கள், ஆளில்லாத தாக்குதல் விமானங்கள், நவீன கண்காணிப்பு ரடார்கள் என்பவற்றை வழங்கு வதன் மூலம் சீனாவுக்கு அதிக சேதங்களை ஏற்படுத்த முடியும். சீனா தாய்வானை கைப்பற்ற முயன்றால் சீனா கடுமையான விலையை செலுத்தவேண்டி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் அமெரிக்காவினால் வழங்கப்பட்ட புதிய *Norwegian-made Advanced Surface-to-Air Missile Systems (NASAMS)* எனப்படும் ஏவுகணைத் தொகுதியை தீவின் வடக்கு பகுதியில் நிறுத்தப்போதவதாக கடந்த வாரம் தாய்வானின் பாதுகாப்பு அமைச் சகம் தெரிவித்திருந்தது.

சீனாவில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் தேசியவாதப் படையினர் தோற்கடிக் கப்பட்ட பின்னர் அவர்கள் இந்த தீவுக்கு துரத்தப்பட்டிருந்தனர். அதன் பின்னர் அவர்கள் அந்த தீவில் சுயாட்சி அதிகாரத்தை அமைத்து ஆட்சிபுரிந்து வருகின்றனர்.

## மீளமுடியாத ... தொடர்ச்சி ...

பெரும் பொருளாதார நாடு வீழ்ச்சியை சந்திப்பது ஐரோப்பா வின் பொருளாதாரத்தை பாதிக்கும் என அவதானிகள் தெரிவித்துள்ள னர். 2022 ஆம் ஆண்டுக்கு முன் னர் ரஸ்யாவின் மலிவான எரி பொருட்களில் இயங்கி வந்த ஜேர் மனின் நிறுவனங்கள் அமெரிக்கா வின் தடை மற்றும் எரிபொருள் குழாய்கள் மீதான தாக்குதல்களை தொடர்ந்து அமெரிக்காவின் மிகவும் அதிக விலை கொண்ட எரிபொருட்களை கொள்வனவு செய்ததால் இந்த பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதிக எரிபொருள் விலையினால் ஜேர்ம னின் உற்பத்திப் பொருட்களை மலிவான விலை யில் சந்தைப்படுத்த முடியவில்லை. அதனால் கடந்த வருடம் ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற் பட்டுள்ளது. கட்டிட நிர்மானத் துறையும் 3.5 விகிதமாக வீழ்ச்சி கண்டுள்ளது என Destatis என்ற நிறுவனத்தின் தலைவர் றுத் பிரான்ட் தெரிவித்துள்ளார் எரிபொருள் விலை யேற்றத்தால் ஏற்பட்ட விலைஉயர்வைத் தொடர்ந்து பல நிறுவனங்கள் ஜேர்மனியில் மூடப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடியினால் கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் ஜேர்மன் அரசு வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் எதிர்வரும் மாதம் அங்கு தேர்தல் இடம்பெறவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இலங்கையை ... தொடர்ச்சி ...

அளவில் இணைப்பது உள்ளிட்ட பல சிறந்த முன்னேற்றங்களை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

ஒட்டுமொத்தமாக, தேர்தல் சட்ட கட்டமைப்பு நன்கு வளர்ச்சியடைந்துள்ளதாக வும், தேர்தல் ஆணைக் குழு மற்றும் சிவில் சமூகத்தின் கூட்டு ஈடுபாடு தேர்தலுக்கு சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளமை அறிக்கையின் மூலம் தெளிவாக காணக்கூடியதாக உள்ளது.

தேர்தல் பிரச்சார காலங்களில் அடிப்படை சுதந்திரம் மதிக்கப்பட்டதுடன் வாக்காளர்கள் தங்களது விருப்பத்திற்கமைய வேட்பாளர்களை தெரிவு செய்ய உண்மையான அரசியல் மாற்று வழிமுறைகளைக் கொண்டிருந்தனர்.

இலங்கையின் ஜனநாயகத்தின் மீள்தன் மையை ஜனாதிபதித் தேர்தல் உறுதிப்படுத் தியுள்ளதுடன் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறும் தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மேலும் சீர்திருத்தங்களை ஜனாதிபதியும் புதிய அரசாங்கமும் செயல்படுத்துவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். தற்போதுள்ள நிலையில், இலங்கையை ஆதரிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராக உள்ளது.

அரசியலில் பெண்களின் பங்கேற்பை அர்த்தமுள்ள வகையில் மேம்படுத்துவதையும், அரச வளங்களை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக அமுலாக்க வழிமுறைகளை வலுப் படுத்துவதையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இறுதி அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட கட்டுப்பாட்டுச் சட்டங்களை ரத்து செய்வதன் மூலம் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான அணு கலை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை மேலும் வலியுறுத்தவும் இந்த அறிக்கை அழைப்பு விடுக்கிறது.

இதேவேளை, வெளிப்படைத்தன்மை மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் மூலம் ஜனநாய கம் செழித்து வளர்கிறது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு தூதுக்குழு வின் தலைமை கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தேர்தல் ஆணையக்குழுவி னால் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண் காணிப்புக்குழு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 முதல் ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை நாட்டில் தேர்தல் கண்காணிப்பு கடமைகளில் ஈடுபட்டது. இது நாட்டின் 9 மாகாணங்களிலும் 70 க்கும் மேற்பட்ட சர்வதேச கண்காணிப்பாளர்களை நியமித்து கண்காணிப்பு கடமைகளை முன் னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹமாஸ்- இஸ் ... தொடர்ச்சி ...

பிரயோகித்ததாக கூறப்படுகின்றது. அமெரிக்கா, எகிப்த்து, துருக்கி மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் புலனாய்வுத்துறை அதிகாரிகளும் பேச்சுக்களில் பங்கெடுத்திருந்தனர்.

மூன்று கட்டங்களாக இடம் பெறவுள்ள இந்த போர்நிறுத்தத்தில் முதல் கட்டமாக ஹமாஸ் அமைப்பினர் தம் வசம் உள்ள 94 கைதிகளில் 33 பேரை விடுவிப்பது எனவும், அதற்கு பதிலாக இஸ்ரேல் 50 பலஸ்தீன கைதிகளை விடுவிப்பது எனவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் எகிப்துக்கும் காசாவிற்கும் இடையிலான போக்குவரத்து பாதையில் இருந்து இஸ்ரேலிய படையினர் வெளியேறுவது உதவிப் பொருட்களை அனுப்புவது போன்ற உடன்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டம் தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெறுவதாகவும் அது போர் நிறுத்தத்தின் 16 ஆவது நாளில் முடிவு செய்யப்படும் என கட்டார் தெரிவித்துள்ளது. அதேசமயம் எல்லா கைதிகளும் விடுவிக்கப்படுவதுடன், காசாவில் இருந்து இஸ்ரேலிய படையினர் வெளியேறுவதும் இரண்டாவது கட்டம் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த போர் நிறுத்தத்தை பல நாடுகளின் தலைவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் ஆகியோர் வரவேற்றுள்ளனர். போர் நிறுத்தம் உள்ள காலப்பகுதியில் தாம் தாக்குதல்களை நிறுத்தி வைப்பதாக ஏமனின் குதீஸ் அமைப்பும் தெரிவித்துள்ளது.

இதனிடையே தமக்கு துணையாக நின்ற ரஸ்யா, சீனா மற்றும் துருக்கி உட்பட பல நாடுகளுக்கு தாம் நன்றி தெரிவிப்பதாக பேச்சுக்களில் ஹமாஸ் சார்பில் பங்குபற்றிய கலிக் அல் ஹயா தெரிவித்துள்ளார்.

## போருக்கு ... தொடர்ச்சி ...

வேண்டும் இல்லை எனில் ரஸ்ய மொழியை அவர்கள்கற்க வேண்டும் அல்லது நியூசிலாந்துக்கு இடம்பெயர்ந்து செல்ல வேண்டும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 4 அல்லது 5 வருடங்களுக்கே பாது காப்பாக இருக்கும். நேட்டோ நாடுகள் அனைத்தும் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யும் ஆயுதங்களை ரஸ்யா 3 மாதங்களில் செய்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்

ரஸ்யாவின் கடற்படையினர் மற்றும் எரிபொருள் கப்பல்கள் அதிகம் பயன்படுத் தும் பல்டிக் கடற்பகுதியில் நேட்டோ கடற்படை தனது நடவடிக்கைகயை அதிகரிக்கப் போவதாகவும், இது கடலுக்கு அடியால் செல்லும் தொலைதொடர்பு வயர்களை பாது காக்கும் திட்டம் எனவும் நூற் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

## வனஜீவராசிகள் ... தொடர்ச்சி ...

பிட்டிருக்கவில்லை.

வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப் பட்டுள்ள காணிகளில் வர்த்த மானி அறிவித்தலுக்கு முன்பதாகவே மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இதில் 19643.59 ஏக்கர் நிலத்தை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும் இதுவரை எவ்வித பகுதியும் விடுவிக்கப்படவில்லை எனவும் இதனால் மக்களுக்கான காணி ஆவணங்களை வழங்க முடியாதுள்ளதாகவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன் 11906.35 ஏக்கர்காணிகள் வனவள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப் படுத்தப்பட்டுள்ளது. இதில் 3261.58 ஏக்கர் நிலத்தை விடுவிக்கக் கோரியும் 1001.52 ஏக்கர் நிலம் மாத்திரமே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலாளர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

## திருகோணமலை.. தொடர்ச்சி ...

நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பிரதேசங்களை இலக்கு வைத்து தொடர் நில அபகரிப்பால் சிறுபான்மை சமூகங்களை சேர்ந்த தமிழ் முஸ்லீம் மக்களே பாதிக்கப்படுகின்றனர். நெற் செய்கையை வாழ்வாதாரமாக நம்பி வாழும் விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜே ஆர் ஜெயவர்தன தொடக்கம் சந்திரிகா, ரணில், மகிந்த, மைத்திரி, கோட்டா, ரணில், அநுர என எந்த அரசாங்கம் மாறி மாறி ஆட்சியை பொறுப்பேற்றாலும் நில அபகரிப்புக்கள் சொடர்ந்து கொண்டே உள்ளது.

நில ஆக்கிரமிப்பை தடுக்க தற்போதைய அரசு புதிய அரசாங்கம் புதியதொரு பொறி முறைகளை உருவாக்க வேண்டும் என்பதே மக்களது எதிர்பார்ப்பாகும்.

ஆனால் அநுர ஆட்சி நான்கு மாதங்களை எட்டும் நிலையில் அவர்களால் ஏற்கனவே கூறிய எந்த நல்லெண்ணமும் செய்கையில் காட்டப் படவில்லை.

கடந்த ஆண்டு டிசம்பரில் இந்தியாப் பயணமும் இந்த ஆண்டு ஜனவரியில் சீனாப் பயணமும் என புதிய ஜனாதிபதி தமது பயணத் தொடர்புகளை முன்னெடுப்பதை மட்டுமே காண முடிகிறது.

ஜனாதிபதி தேர்தலும், பொதுத்தேர்தல் இரண்டிலும் தேசிய மக்கள் சக்தி தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல விடயங்களை கூறியிருந்தும் எதிர்பார்த்த எதையுமே இதுவரை செய்யவில்லை என்ற குறை மக்கள் மத்தியில் உள்ளது.மாறாக வடகிழக்கில் தமிழ் நில ஆக்கிரமிப்பு தொடர்வதையே காணலாம்.

• • •

## ஒரு திரை ... தொடர்ச்சி ...

கல்லூரிகளை மீண்டும் திறக்க வேண்டுமென்று நானும் 12 நண்பர்களும், கல்லூரி வாயிலில் உண்ணாவிரதம் இருந்தோம். எங்கள் கல்லூரி அமைந்திருக்கும் கடற்கரைச் சாலை வழியேதான் முதல்வர் எம்.ஜி.ஆர் சென்னை கோட்டைக்குப் போவார். எங்கள் பேராட்டத்தால் அவரது பாதை மாற்றப்பட்டது.

நான்காவது நாள், எங்கள் போராட்டம் உறுதியானது என்பதை உணர்ந்த பிறகுதான், காவல்துறை எங்களைக் கைது செய்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோம். சிகிச்சைப் பெற மறுத்துவிட்டோம். உண்ணாவிரதப் போராட்டம் , அரசு மருத்துவமனைக்கு இடம் பெயர்ந்தது. மற்ற கல்லூரிகளின் மாணவர்கள் பெருந்திரளாக வந்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். ஐந்தாவது நாள் இரவில், அமைச்சர்கள் அரங்க நாயகமும், பொன்னையனும் வந்து சந்தித்தனர். அரங்கநாயகம் தான் அப்போது கல்வி அமைச்சர். ‘ நீங்கள் தான் உண்ணாவிரதம் தொடங்கினீர்கள் ..... இதை நிறுத்தினால், கல்லூரி திறக்கும் தேதியை முதல்வர் அறிவிப்பார்’ என்றார், அவர். ‘நீங்கள் தான் மூடினீர்கள் .... திறப்பதாக அறிவியுங்கள்.... உண்ணாவிரதத்தை நிறுத்துகிறோம் ‘ என்றேன் நான். கடைசியில், முதல்வர் எம்.ஜி.ஆருடன் காவல்துறை வயர்லெஸ் மூலம் பேசிய பிறகு, ‘ நாளை காலை 6.40 வானொலி மாநிலச் செய்திகளில் ,கல்லூரி திறக்கும் தேதியை முதல்வர் அறிவிப்பார். உடனடியாக நீங்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தி விட வேண்டும் ‘ என்கிற சமரசத்துக்கு வந்தார். நானும் நண்பர்களும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தோம். திரும்பிப்போகும் போது , அரங்க நாயகம் சொன்ன வார்த்தைகளை என்றும் மறக்கவே முடியாது.’ஐந்து நாள் ஆகிவிட்டது... நீங்கள் மிகவும் பலவீனமடைந்திருப்பதாக மருத்துவர்கள் சொல்கிறார்கள். இன்று இரவு உங்கள் உடல் நிலைக்கு மேலும் பாதிப்பு ஏற்பட்டு விட்டால், முதலமைச்சருக்கு நான் பதில் சொல்ல வேண்டியிருக்கும்’ என்றார் கவலையுடன்! அவரது கண்களில் அச்சம் தெரிந்தது. அது,தனக்கு மேல் இருக்கும் ஒரு மனிதநேயம் மிக்க முதலமைச்சர் தன்னைக் கேள்வி கேட்பாரே என்ற அச்சம் . நானும் தோழர்களும் எம்.ஜி.ஆரை எதிர்த்துப் போராடுகிறோம் .

அந்தமனிதரோசுயகௌரவம்பார்க்காமல் , எங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதுடன், எங்களுக்கு எதுவும் ஆகிவிடக்கூடாதே என்று வேறு கவலைப்படுகிறார். இதுதான் எதிர்ப்பவர்கள் மீதும் அவர் பரிவு காட்டிய கனிவு. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், 2009 இல் நடந்த செங்கல்பட்டு சம்பவம். ஈழத்தில் இனப்படுகொலை நடந்து கொண்டிருந்த அந்தச் சமயத்தில் , தமிழகம் முழுக்க மாணவர்கள் போராடுகிறார்கள். அதில், செங்கல்பட்டு சட்டக் கல்லூரி மாணவர்கள் நடத்திய உண்ணா நிலை அறப்போர் குறிப்பிடத்தக்கது. அப்போது , கலைஞர் கருணாநிதி தான் முதல்வர். சட்டக்கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதப் போர் ஒரு வாரத்தைக் கடந்தும் நீடிக்கிறது.

வாழ்வோ- சாவோ என்கிற நிலையை எட்டிய பிறகும் , ஈழத்து இனப்படுகொலைக்கு முடிவு கட்டாமல் போராட்டத்தை முடிப்பதில்லை என்கிற உறுதியுடன் இருக்கிறார்கள் மாணவர்கள். காலை முதல் இரவு வரை அவர்களுடன் இருக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து , செங்கல்பட்டிலேயே இருந்தேன். எட்டாவது நாள் இரவு மதுரையில் ஒரு நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய வணிகர் தலைவர் சகோதரர் வெள்ளையன் , செங்கல்பட்டு மாணவர்கள் கவலைக்கிடமாக இருப்பதை கேள்விப்பட்டு, மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து நேராக செங்கல்பட்டுக்கு வந்து , மாணவர்களைச் சந்தித்தார். அவர்களுடன் சுமார் 2 மணிநேரம் இருந்தார். அங்கிருந்த காவல் துறை அதிகாரிகளிடம் விசாரித்தார். ‘இப்போதைக்கு மாணவர்களைக் கைது செய்ய வாய்ப்பில்லை ... நீங்கள் புறப்படுங்கள் .. கவலைப்பட வேண்டாம்’ என்று சொல்லி வெள்ளையனை அங்கிருந்து அனுப்புவதிலேயே குறியாயிருந்தது காவல்துறை. ‘ காலையிலேயே வந்து விடுகி றேன் ‘ என்று மாணவர்களிடம் கூறிவிட்டு , வெள்ளையனுடன் நானும் சென்னைக்குத் திரும்பினேன். மறுநாள் காலை 6 மணிக்கு செங்கல்பட்டுக்குப் புறப்படும் போதே , மாணவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் வருகிறது. பதறியடித்துக் கொண்டு செங்கல்பட்டு போனேன். மருத்துவமனையில் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். வலுக்கட்டாயமாக அவர்களுக்கு சிகிச்சை தரப்பட்டது. கைது செய்து சிகிச்சை கொடுப்பது தவறில்லை.

ஆனால் அவர்களைக் கைது செய்த விதம் தான் கொடுமை. தொடர் உண்ணா நோன்பால் சோர்ந்து போயிருந்த அவர்களை , அவர்கள் கீழே விரித்துப் படுத்திருந்த போர்வையோடு சுருட்டியெடுத்து காவல்துறை வாகனத்தில் ஏற்றியிருக்கிறார்கள். மனிதநேயம் சிறிதுமற்ற அந்த நடவடிக்கை தான் என்னைக் கொதிக்க வைத்தது. எம்.ஜி.ஆர் எங்களை அப்படியெல்லாம் கண்ணியக் குறைவோடு நடத்தவில்லை. என்ன தான் செய்கிறார்கள்.... பார்ப்போம்.... என்கிற வக்கிரப்புத்தியுடன் வேடிக்கை பார்க்கவில்லை. ‘இந்த மாணவர்களுக்கு ஏதாவது ஆகிவிட்டால் நாம் தானே பொறுப்பு ‘ என்று கவலைப்பட்டார், எம்.ஜி.ஆர். அது அரங்க நாயகத்தின் குரலில் எதிரொலித்தது. போர்வையோடு சுருட்டியெடுத்துக் கொண்டுபோய் மருத்துவ மனையில் போட்ட காவல்துறையினரின் மனோபாவம், அப்போதிருந்த முதல்வரின் அடக்குமுறை மனோபாவத்தின் எதிரொலி. எல்லா முதல்வர்களாலும் எம்.ஜி.ஆர் ஆகிவிட முடியுமா என்ன ?

• • •

## 2024: எதிரிகளை ... தொடர்ச்சி ...

லெபனானில் ஹில்பொல்லாவுடனும், அதே நேரம் ஈரான், யேமன், சிரியா, ஈராக் போன்ற நாடுகள் மேல் ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது. அதே நேரம் அதே நாடுகளின் தாக்குதல்களுக்கும் உள்ளானது.

அமெரிக்காவைப் பொறுத்த வரையில், மிகப் பாரிய அளவிலான இராணுவ உதவிகளை இஸ்ரேலுக்கு வழங்கிவருகிறது. இவற்றுள் தற்பாதுகாப்புக்கான தாட் ஏவுகணைகளும் (THAAD Missiles) எதிர்த்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் எவ் 35 விமானத்தின் பகுதிகள் போன்றவையும் அடங்கும். காஸாவில் இவ்வளவு அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட பின்னரும், பன்னாட்டளவில் ஏற்பட்டுள்ள கடும் எதிர்ப்பின் மத்தியிலும், அமெரிக்கா இவ்வாறான உதவிகளைத் தொடர்ச்சியாக இஸ்ரேலுக்கு வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான சூழ்நிலைகளின் காரணமாக, அமெரிக்காவாக இருந்தாலென்ன, மேற்குலகமாக இருந்தாலென்ன அரபுலகத்தால் இவர்கள் எதிரிகளாகவே பார்க்கப்படுகின்றனர். இதன் காரணமாக ஐசிஸ் (IS) போன்ற தடைசெய்யப்பட்ட பயங்கரவாதக் குழுக்களுடன் இணைவோரின் எண்ணிக்கை அதிகமாகிறது. இவ்வாறு பன்னாட்டுப் பயங்கரவாதம் வளர்வதற்கு இவ்வாறான செயற்பாடுகள் தீனிபோடுகின்றன என்று மேற்குலகப் பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரிக்கை விடுக்கிறார்கள்.

தனது எதிர்ப்பு அச்சு என்று ஈரான் அழைக்கின்ற ஹிஸ்பொல்லா, ஹமாஸ், ஹூத்திஸ் போன்ற இராணுவக் குழுக்கள் இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்ட மிகக் கடுமையான தாக்குதல்களின் காரணமாக குறிப்பிடத்தக்க அளவு பலவீனப்படுத்தப்பட்டு இருக்கின்றன. பலவீனப்படுத்தப்பட்ட பொழுதிலும் அவற்றின் பலம் முற்றாக அழிக்கப்படவில்லை.

மத்திய கிழக்குப் பிரதேசத்திலுள்ள தனது கூட்டாளிகளுக்கு ஆயுதங்களை வழங்கிவரும் அதே நேரம், உக்ரேனுக்கு எதிரான போரில் பயன்படுத்தப்படுவதற்காக ரஷ்யாவுக்கும் தனது ஏவுகணைகளை ஈரான் வழங்கிவருகிறது. இவ்வாறான உதவிகளுக்குப் பிரதியுபகாரமாக, ரஷ்யாவும் தனது செய்மதிப் புலனாய்வு வளங்களை ஈரானின் ஊடாக ஹூத்திப் போராளிகளுக்கு வழங்கி, இந்து சமுத்திரத்திலிருந்து செங்கடலுக்குள் செல்லும் மேற்குலக நாடுகளைச் சேர்ந்த கப்பல்களை அந்தப் போராளிக்குழு தாக்குவதற்கு வழிசெய்து வருகிறது.

### மொஸ்கோவின் புதிய கொல்லைப் புறமாக மாறியுள்ள ஆபிரிக்கா

மத்திய கிழக்கில் தனது முக்கிய நட்புநாடான சிரியாவை ரஷ்யா இழந்திருப்பது என்னவோ உண்மை தான். ஆனால் அதற்கு ஈடாக லிபியாவின் பெங்காஸியில் மார்ஷலாக விளங்குகின்ற கலிவா கவ்ரார் (Marshal Khalifa Kaftar) ரஷ்யாவின் மிகவும் பலமான ஆதரவாளராக இருக்கிறார். அண்மையில் லிபிய வான்பரப்பில் ரஷ்ய சரக்கு விமானங்கள் பிராக் (Brak) என்ற இடத்தில் கடற்கரையோரமாகவும் நாட்டுக்குள்ளும் பறந்ததை அண்மையில் காணக்கூடியதாக இருந்தது.

மத்திய கிழக்கில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான நெம்புப் பலகையாக சிரியாவை ரஷ்யா நோக்குகிறது. அதே வேளை தென்புறமாக சூடானிலும், தனது கூலிப் படைகளின் ஊடாக தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடிய ஒரு தளமாகவும் லிபியாவை ரஷ்யா பயன்படுத்தி வருகிறது.

முன்னர் வாக்னர் குழு (Wagner Group) என்ற அழைக்கப்பட்ட ரஷ்யாவின் கூலிப்படை, தற்போது 'ஆபிரிக்கப் படை' எனப் பெயர் மாற்றப்பட்டு, ஸாஹேல் (Sahel) நாடுகள், மற்றும் பிரெஞ்சு காலனீய நாடுகளாக இருந்த மாலி, புர்க்கீனா பாஸோ, நைஜர், மத்திய ஆபிரிக்கக் குடியரசு போன்ற நாடுகளில் பிரெஞ்சு மற்றும் மேற்குலக படைகளை ஈடுசெய்திருக்கிறது.

மேற்குறிப்பிட்ட நாடுகளில் இஸ்லாமிய பயங்கரவாதக் குழுக்களின் பிரச்சினைகளை ரஷ்யா இப்போது தனது தலை மேல் போட்டிருக்கிறது. ஆனால் இடைக்காலத்தைப் பொறுத்த மட்டில், அந்த நாடுகளிலிருந்து கனிம வளங்கள் உள்ளிட்ட ஏராளமான பெரும் செல்வத்தை மொஸ்கோ அந்த நாடுகளிலிருந்து பெற்றுவருகிறது.

மேற்குறிப்பிட்ட பிரதேசத்தில் உக்ரேன் ஒரு தவறான நகர்வைத் தற்போது முன்னெடுத்திருக்கிறது. மாலியின் அரச படைகளுக்கும், அவர்களை ஆதரிக்கும் ரஷ்யாவுக்கும் எதிராக ஒரு பாரிய தாக்குதலை கடந்த ஜூலை மாதத்தில், உக்ரேன் மேற்கொண்டிருக்கிறது. துவாரெக் (Tuareg) போராளிகளுக்கு ஆளில்லா விமானங்களையும் பயிற்சிகளையும் வழங்கியதாக உக்ரேன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. துவாரெக் போராளிகள் முன்னெடுத்த வழிமறிப்புத் தாக்குதலில், ரஷ்ய கூலிப்படை வீரர்கள் 84 பேரும், 47 மாலிப் படைவீரர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தனது எதிரிக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களை வெற்றிகொள்ள கீவ் முயற்சிப்பதை அவதானிக்கக்கூடியதாகவிருக்கிறது. அதே நேரம் துவாரெக் போராளிகளுக்கு ஆளில்லா விமானங்களை உக்ரேன் விநியோகித்த விடயம் அவர்களுக்குப் பிரச்சினையாக மாறியிருக்கிறது. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டை உக்ரேன் மறுத்திருக்கிறது.

நன்றி: பிபிசி

## முள்ளிவாய்க்கால் ... தொடர்ச்சி ...

அரசியல் அதிகாரம், அதிகாரத்தில் பங்கு வகித்தல் என்பனவற்றை எல்லாம் தோலிருக்க சுளைபிடுங்குவது போல் ஒவ்வொன்றாகப் பிடுங்கிவிடுவது. இந்த வகைப்பாடானது உயிர் அழிப்பல்லாது, பண்பாட்டு இன அடையாளங்களை கட்டமைப்பு ரீதியாக, படிப்படியாக, நீண்டகால நோக்கில் அழித்தொழிப்பது என்ற போக்கிற்குரியது. இத்துடன் கூடவே இரத்தம் தோய்ந்த இனப்படுகொலையும் பொலீஸ், இராணுவ, சமூக, பொருளாதார, கல்வி ஒடுக்குமுறைகளும் கூட்டுச் சேரும். அதாவது, ஒரு மக்கள் கூட்டத்தின் தனித்துவத்தை, அவர்களின் அடையாளத்தை, அரசியல் - பொருளாதார இருப்பை கடல், நிலம் வாழ் அதிகாரத்தை, உயிர் வாழ்வை கொஞ்சம் கொஞ்சமாகவும், பின்பு மொத்தமாகவும் அழிப்பது உட்பட அனைத்தையும் உள்ளடக்கிய வகையில், ஓர் உடலின் அனைத்து உறுப்புகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து முழு வடிவம் பெற்றுள்ளது போல, அனைத்தையும் தழுவிய (Holistic) முழுமைப்பட்ட இத்தகைய அழித்தொழிப்பு அணுகுமுறைக்கு 'கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை' என்ற பதம் எடுத்தாளப்படுகிறது.

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது ஒரு முறைமை (System) என்ற வகையில் அது அதற்கே உரிய தர்க்கபூர்வப் போக்கைக் (Logical development) கொண்டிருக்கும். முறைமை, தர்க்கபூர்வப் போக்கு என்பன நல்மனம் கொண்ட ஒரு சிலரின் அல்லது தனிமனித விருப்பு - வெறுப்புகளுக்கு அப்பால் தன்னகத்தே செயற்படும் வல்லமை கொண்டவை. இது தொடர்பாகப் பின்வரும் கோட்பாட்டு வகையான பார்வை கவனத்திற்குரியது.

*"What is structural genocide?*

*Therefore, if adhering to the logic of a social system inevitably results in structural violence that causes death on a mass scale, then it is apparent that structural genocide is an intentional outcome of human behaviors that adhere to that logic."*

'ஒரு சமூக அமைப்பில் காணப்படும் தக்கபூர்வ விதிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அது தவிர்க்க முடியாத வகையில் பாரிய அளவு வன்முறைகளையும் அதனால் மரணங்களையும் ஏற்படுத்தும் என்றால், அது அவ்விதிகளை மாற்றாது தொடர்ந்து அப்படியே கடைப்பிடித்துவரும் மனிதர்களின் நடத்தைகளினால், வேண்டுமென்றே, திட்டமிட்ட வகையில் நிகழ்த்தப்படும் கட்டமைப்பான இனப்படு கொலை என்பது வெளிப்படை' அதாவது புவியியல், பொருளாதாரம், அரசியல், வாழ்க்கை முறை, பழக்க வழக்கம், வரலாறு மற்றும் வரலாற்றியல் ஆகியவற்றால் ஒரு சமூகம் இனப்படுகொலைக்கு உரிய வகையில் கட்டமைப்புச் செய்யப்பட்டு, அந்தச் சமூக அமைப்பு ஒரு முறைமையாகச் செயற் படும் இடத்தில் அந்தச் சமூக அமைப்பு முறையை மாற்றாமல், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்குத் தீர்வு காண முடியாது என்பதே தத்துவார்த்த அரசியல் உண்மையாகும்.

இந்தவகையில், 'இனப்படுகொலைக்கான பரிகாரம் பிரிந்து செல்லல் மட்டுமே'

(Genocide can be compensated only by secession)

என்ற கூற்றும் கவனத்திற்குரியது.

தொடரும்...



## சர்வதேச கல்வி ... தொடர்ச்சி ...

**இன்றைய கல்வி முறையில் பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றன:**

- சகல இன மக்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் கல்வி வழங்கப்படவில்லை
- நூன்கு மதங்களைக் கொண்ட பல்லின சமூகங்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற இலங்கையில் மகாவம்சம் என்ற திரிபுபடுத்தப்பட்டபௌத்த வரலாற்றைச் சகல மக்களுக்கும் திணிக்கும் வகையில் பாடத் திட்டங்களின் சிங்கள பௌத்த நாகரிகங்கள் புகுத்தப்பட்டுள்ளன.
- இனங்களுக்கிடையில் நல்லுறைவையும் பரஸ்பர நம்பிக்கையையும் ஏற்படுத்த தவறிவிட்டது.
- வரலாறு பாடத்தில் தமிழர்களின் வரலாறுகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு இலங்கை பூர்வீகமாகவே பௌத்த சாடு என்று காட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கையில் பிரித்தானியரின் வருகைக்கு முன்னர் இருந்த மூன்று இராட்சியங்களில் யாழ்ப்பாண இராட்சியம் வலிமை மிக்க ஒரு அரசாக இருந்தது என்பது இருட்டிடிப்புச் செய்யப்பட்டுள்ளது. சுங்கள சைர்களைப் பற்றியும், சிங்கள இராஜதானிகளைப் பற்றியும், பௌத்த சின்னங்களைப் பற்றியுமே அதிகளவில் பேசி தமிழ் பேசும் மாணவர்கள் மத்தியில் தமிழர்களின் வரலாறு முற்றாகவே மூடி மறைக்கப்பட்டு இலங்ரக ஒரு பௌத்த சிங்கள அரசு என்ற மாயையே ஏற்படுத்திவருகின்றது.
- சித்திர பாடத்தில் பெரும்பாலான ஓவியங்களும் அவை தொடர்பான வரலாறுகளும் சிங்களகலபசாரத்தையும், புத்த விகாரைகளில் உள்ள சின்னங்களையுமே மக்கியப்படு;ததி எழுதப்பட்டுள்ளதால் நித்திர பாடத்தில பெரும்பாலான தமிழ் பேசும் மாணவர்கள் சித்தி அடையத் தவறிவிடுகின்றனர். இதனால் சித்திர பாடத்தை எடுக்கும் மாணவர்களின் தொகை தற்பொழுது குறைந்து வருகின்றது.

மாணவர்களிடையே போதைவஸ்து பாவனை, அமைதியின்மை, தற்கொலை செய்பவ்களின் எண்ணிக்கை அதிகரித்துவருதல், ஒழுக்கமின்மை போன்ற எதிர் மறையான விளைவுகள் ஏற்படுகின்றன.

இவைபோன்ற பல குறைபாடுகளை உடைய கல்வித் திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று பல வருடங்களாகத் தமிழர்களினால் கோரிக்கைகள் முன் வைத்தபொழுது, அவை இன்று வரை ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் கவனத்தில் எடுக்கவில்லை என்பது தமிழர் தரப்புக்களைப் புண்படுத்தி வருகின்றது.

2022ஆம் ஆண்டு சர்வதேச கல்வித் தினத்திற்காக ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட கருப்பொருள் "பாடத்திட்டத்தை மாற்றுதல், கல்வியை மாற்றுதல்" என்ற தொனிப்பொருளில் சர்வதேச கல்வித்தினம் கொண்டாடப்பட்ட பொழுதும் இலங்கையில் அது பெயரளவிலேயே வெறும் அறிக்கைகளைத் தயாரித்து ஐ.நாவுக்கு அனுப்புவதுடன் விழாக் கொண்டாட்டங்கள் எல்லாம் முடிவடைந்தன. அதில் குறிப்பிட்டபடி கல்விச் சீர்திருத்தத்தில் எவ்வித மாற்றங்களும் கொண்டுவரப்படவில்லை. தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் கூட ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

ஆனால் அனுரா அரசாங்கம் தமிழ் மக்களினதும் நம்பிக்கையைப் பெறவேண்டுமானால் கல்வி மறு சீரமைப்புக்களை ஏற்படுத்தும் முன்னர் பின்வரும் விடயங்களைக் கவனிக்க வேண்டும்:

தமிழர் தரப்பினரிடம் இருந்தும் கல்வி மறுசீரமைப்புத் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்

கல்வி மறு சீரமைப்புக் குழுவில் தமிழ் புத்தி ஜீவிகளும் பாடசாலைகளில் கற்பிக்கும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களும் இணைத்துக் கொள்ளவேண்டும்

பாடப் புத்தகங்களிலும்,பாடத்திட்டங்களிலும் இனவாதக் கருத்துக்கள் மற்றும் இனங்களுக்கிடையில் முரணபாடுகளை ஏற்படுத்தும் கருத்துக்கள ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ளவேண்டும்

வரலாறுகளில் திருபுகளை ஏற்படுத்தி சிங்களக் கலாசாரம் மற்றும் சிங்கள அரசுகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து சிங்களக் கலாசாரத்தைத் திணிக்கும் முயற்சியைக் கைவிட்டு சகல இனங்களும் ஏற்றுக் கொள்ளும் வகையிலும்,அவற்றை அறிந்துகொள்ளும் வகையிலும் தமிழ் மக்களின் வீரம் செறிந்த வரலாறுகளும் சேர்க்கப்படவேண்டும்.

இனங்களுக்கிடையில் பாகுபாடு, வெறுப்பு, இனவெறி மற்றும் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் ஆகியவற்றின் ஆபத்தான விடயங்களுக்கு இணையாக வன்முறைகளினால் ஏற்படக்கூடிய மோதல்களினால், உலகில் சமாதான முயற்சிகள் என்பன தூர விலகிச் செல்கின்றன.

தமிழர் பரிதெசத்தில் காணப்படும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தமிழ் ரிரதேநத்தில் உள்ள தொல்பொருட் சின்னங் களின் முக்கியத்துவம் மற்றும் அவற்றைப் பேணுதல் என்பனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப் படவேண்டும்

அதேவேளை பல்கலைக் கழகங்களில் வழங்கப்படும் கல்விக்கும் வேலை உலகு எதிர்பார்க்கும் கல்வித் தகைமைகளுக்கும் இடையில் பாரிய வேறுபாடு நிலவுகின்றமை தொடர்பாகப் பலராலும் சுட்டிக்காட்டப்பட்ட பொழுது அவை இதுவரை கவனத்தில் கொள்ளப் படவில்லை. இந்த நிலையில் பல்கலைக் கழகக் கல்வியிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் புதிய நவீனத்துவம் வாய்ந்த பாடத் திட்டங்களையும் புதிய பாடநெறிகளையும் அறிமுகப்படுத்துவதுடன் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கான உயர் மட்டப் பயிற்றி வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

சர்வதேச கல்வித்தினத்தைக் கொண்டாடுவதன்மூலம் பின்வரும் நிலைமைகள் ஏற்படுகின்றன.

கல்வி என்பது ஒரு மனித உரிமை. இந்த உரிமையை ஒருவரிடமிருந்து பறிப்பது என்பது மிகவும் கொடுமையானது.அதுவும் ஒரு குறித்த இனத்தை இலக்கு வைத்த கல்வி உரிமையைப் பறிப்பதோ அல்லது பாரபட்சமாக நடத்தப்படுவதோ ஏற்றுக் கொள்ளமுடியாது.

கல்வி இல்லாமல், ஒரு சமுகத்தில் தொடர்ச்சியான வளர்ச்சி இருக்க முடியாது. சமூகங்கள் பரிணமிக்கவும் வளரவும் உதவுவதற்கு கல்வி அவசியம்.

நவீன தொழில் நுட்பத்தை கல்வி உலகிலும்,வேலை உலகிலும்,தனி நபர் வாழ்க்கையிலும் கடைப்பிடிப்ப முடிகழனடறது.

ஒரு தனி மனிதனுக்குக் கல்வியை வழங்குவதன் மூலம் அவர்களுக்கான நோக்கம், குறிக்கோள்களை ஏற்படுத்தவும் சிந்திப்பதற் கும், இலக்குகளைத் தீர்மானிக்கவும், கருத்துருவாக்கத்தை ஏற்படுத்து வதற்குமான உரிமையை வழங்குகின்றது.

'நிலையான அமைதிக்கான கற்றல்' மற்றும் ஒவ்வொரு தனி மனிதனுக்குமான சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குதலை நிறைவேற்றுவதை டநாக்கமாககக் கொண்டுள்ளது.

தன்னையும், பிறரையும், தான் வாழும் நாட்டையும் நேசித்தல் மற்றும் பல்வேறு விடயங்களையும் கற்றுக்கொள்வது' என்ற வகையில் குழந்தைகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். "உலகை மாற்ற ஒவ்வொருவரும் பயன்படுத்தக்கூடியமிகசக்திவாய்ந்தஆயுதம்." என்று நெல்சன் மண்டேலா குறிப்பிட்டது போன்று தரமான கல்வியின் மூலம் பெரிய அளவிலான மாற்றத்தை ஏற்படத்தலாம் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

• • •

## எல்லைதாண்டும் ... தொடர்ச்சி ...

இலாபம் பெறுவதுதான் அவர்களுடைய இலக்கு. அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை தமிழக அரசியல் தலைவர்களுக்கும் உள்ளது. இந்த நிலையில்தான் தமிழக முதலமைச்சரும் இருக்கிறார்.

முதலமைச்சர் ஸ்டாலின், இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். கடிதத்தில், இலங்கை அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்க இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

"தமிழக முதல்வர் ஸ்டாலின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு அனுப்பும் கடிதத்தில் தமிழக மீனவர்களின் அத்து மீறிய செயல்பாடுகள் குறித்து குறிப்பிடுவதில்லை. யுத்தத்தால் நீண்டகாலம் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போதுதான் ஓரளவு மீண்டெழும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்" என்றும் தெரிவித்திருக்கும் சந்திரசேகர், "அவர்களின் வாழ்வாதாரம் சுரண்டப்படுகின்றது அவர்களால் அடுத்த கட்டமாக என்ன செய்ய முடியும்?" என்றும் அவர் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

"பொட்டம் ட்ரோலிங் முறைமை எனப்படும் ட்ரோலர் படகுகளில் சட்டவிரோதமாக மீன்பிடியில் தமிழக மீனவர்கள் ஈடுபடுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று தமிழக முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்துள்ள அமைச்சர் சந்திரசேகர், "அந்த முறையை தடை செய்ய வேண்டும்" என்றும், "இலங்கையில் சட்டவிரோத மீன்பிடி முறை தடைசெய்யப்பட்டுள்ளது. எமது எதிர்கால சந்ததியினருக்கு கடல்வளத்தை பாதுகாத்து கொடுக்க வேண்டும். அதனையே இந்தியாவிடமும் தமிழக முதல்வரிடமும் கோருகிறோம்" என்றும் சென்னையில் வைத்து தமிழக ஊடகங்களில் கூறியிருக்கின்றார்.

இந்தப் பரச்சினைக்குத் தீர்வைக்காண்பதற்கு, இழுவை மடி வலைகள் மீதான தடையை கடுமையாக அமுல் செய்வது. எல்லைதாண்டும் மீனவர்களை கைது செய்வது. படகுகளைத் தடுத்து வைப்பது என்பவற்றை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதுதான் அரசாங்கத்தின் தீர்வாக இருக்கும் என்றே தெரிகிறது. பேச்சுவார்த்தைகள் மூலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை அரசாங்கம் உணர்ந்திருப்பதாகவே தெரிகின்றது. அதனால்தான், தமிழக மீனவர்களுடன் இனிமேல் பேசப்போவதில்லை என்று அமைச்சர் சந்திரசேகர் பகிரங்கமாகவே சொல்லியிருக்கின்றார். சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முடியுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.